# ஈழநாடு
Eelanadu ——————— ඊළනාඩු








வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 08.04.2021 வியாழக்கிழமை | இதழ் : 129 | பக்கங்கள் : 16





# சமஷ்டி அரசமைப்பு மூலமே நாட்டைப் பாதுகாக்க முடியும்

## அரசமைப்பு நிபுணர்குழுவிடம் விக்கி

கொழும்பு, ஏப்ரல் 09

சமஷ்டி அல்லது கூட்டாட்சி முறைமையிலான அரசமைப்பு உருவாக்கப்பட்டதால்தான் இந்த நாடு பேரழிவிலிருந்து மீண்டெழுந்து அமைதி, சமாதானம், அபிவிருத்தி, நல்லிணக்கம் ஆகிய உயர் வழிகளில் மேலுயர முடியும் என புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழு முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தெரிவித்திருக்கின்றது.

15



11

நுண்கடன்களை ரத்து செய்யக்கோரி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்!



12

அஸ்ராஸெனகா இரத்தக் கட்டி பாதிப்பை ஏற்படுத்துகிறது!



13

நியூஸிலாந்துக்கு எதிரான தொடரை வென்றது ஆஸி!



14

மீண்டும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொரோனா கொத்தணி உருவாகலாம்

## தடையை மீறி நேற்று அரச பஸ்கள் மத்திய பஸ் நிலையத்தில் சேவை!

### தொற்று பரவல் தீவிரமாக உள்ள நிலையில் அடாத்தான நடவடிக்கை என பொலிஸ் விசனம்

யாழ்ப்பாணம், ஏப். 08

தடையை மீறி, அரச பஸ் சேவை யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள மத்திய பஸ் நிலையத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது.

யாழ்.நகர வர்த்தகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக

கடந்த 26 ஆம் திகதியிலிருந்து

15

## தொற்றாளர்கள் குறைவு கட்டுப்பாடுகள் தளர்வு

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.08

கொரோனா வைரஸ் தொற்றால் நாளாந்தம் அடையாளம் காணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது நாளாந்தம் சுமார் 200 நோயாளி

15

## கொரோனா தொற்றால் மேலும் மூவர் மரணம்!

### 190 புதிய தொற்றாளர்கள்

கொழும்பு, ஏப்.08

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மேலும் மூவர் உயிரிழந்தனர்

15

## யாழ்ப்பாணத்தில் 25 பேர் உட்பட வடக்கில் 28 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஏப்.08

யாழ்ப்பாணத்தில் மேலும் 25 பேருக்கும் மன்னாரில் இருவருக்கும் வவுனியாவில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்றுப் புதன்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களில் 17 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும்

15

## குடும்பத்துக்கு 3 கிலோ அரிசி 2 வாரங்களுக்குப் போதுமாம்!

கொழும்பு, ஏப். 08

மூவரை கொண்ட குடும்பம் ஒன்றுக்கு இரண்டு வாரங்களுக்கு 3 கிலோ அரிசி போதுமானது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சதொச மற்றும் கூட்

15

## மாநகர காவல்படையிடம் பொலிஸ் தீவிர விசாரணை

### ஆணையாளரும் அழைக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ். மாநகரசபையினால் நேற்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட யாழ். மாநகர காவல்படையைச் சேர்ந்த ஐந்து பேரிடமும் யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் யாழ்.

15

## பிரபாகரனின் படத்தை அலைபேசியில் வைத்திருந்த இளைஞன் கைதாகினார்!

யாழ்ப்பாணம், ஏப். 08

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படத்தை அலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை விளக்கமறியலில்

15

## 11 இஸ்லாமிய அமைப்புகளுக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டது!

கொழும்பு, ஏப். 08

சர்வதேச மற்றும் உள்நாட்டை சேர்ந்த 11 இஸ்லாமிய அமைப்புகளை தடை செய்வதற்கு சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று அனுமதி வழங்கினார்.

இந்த அமைப்புகள் பயங்கரவாத மற்றும் இஸ்லாமிய அடிப்படை

15

## ஈஸ்டர் தாக்குதலில் 54 வெளிநாட்டவர்!

### யாரும் தப்பமுடியாது என்கின்றார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஏப்ரல் 08

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்பில் அரசாங்கம் உள்நாட்டில் மாத்திரமல்ல வெளிநாட்டிலும் முழுமையான விசாரணைகளை நடத்

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதலில்...

தியுள்ளது. 54 வெளிநாட்டவரை அரசாங்கம் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக அடையாளம் கண்டுள்ளது" என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான 4ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

"மாவனல்லை சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தியிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்திருக்க முடியும். இந்த பாரிய அழிவு ஏற்பட்டிருக்காது. மாவனல்லை சம்பவத்தின் பின்னர் பலர் கைதுசெய்யப்பட்டனர். ஆனால், துர்திஷ்டவசமாக அவர்கள் மீண்டும் விடுதலை செய்யப்பட்டனர். இதற்கு பொறுப்புக்கூற வேண்டியது யார்?

இப்போதுள்ள சாட்சியங்களின் பிரகாரம் அத்தருணத்தில் இந்தச் சம்பவம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும். கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு அரசியல் உத்தரவுகள் ஏதும் வழங்கப்பட்டுள்ளதா என்றும் விசாரணைகளை முன்னெடுக்க முடியும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசு, நீதித்துறை மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களம் ஆகியவை இணைந்து செயற்பட்டால்தான் மக்கள் தெளிவடைவார்கள். 99 பேர் சம்பவத்துடன் தொடர்புடையதான குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 36 விசாரணைகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் அறிக்கையில் நபர்கள், சம்பவங்கள், இடங்கள் தொடர்பில் தெளிவான சாட்சியங்கள் உள்ளன. வனாத்த வில்லுவில் கண்டறியப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் தெளிவான சாட்சியங்கள் உள்ளன. 26ஆயிரம் வாள்கள் தொடர்பில் ஆராயுமாறு கர்தினல் மேன்முறையீட்டு நீதிமன்றம் சென்றிருந்தார். இதற்காக தற்போது இரண்டு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. சுங்கத் திணைக்களத்தின் ஊடாக 26 ஆயிரம் வாள்களை நாட்டுக்குள் கொண்டுவருவது இலகுவான காரியமல்ல. இதற்காக அரசியல் உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா எனக் கண்டறிய வேண்டும்.

விடுதலைப் புலிகளால்கூட இரண்டு, மூன்று மணித்தியாலங்களில் கொழும்பு முதல் மட்டக்களப்பு வரை 8 குண்டுத் தாக்குதல்களை நடத்த கூடியதாக இருக்கவில்லை. இவ்வாறான தாக்குதல்களை நடத்த வேண்டுமென்றால் மாதக்கணக்கில் அல்லது வருடக்கணக்கில் திட்டமிட வேண்டும். இந்த வலையமைப்பை உருவாக்க நிதியை வழங்கியது யார்?. ஆகவே, அரசாங்கம் உள்நாட்டில் மாத்திரமல்ல வெளிநாட்டிலும் முழுமையான விசாரணைகளை நடத்தியுள்ளது. 54 வெளிநாட்டவரை அரசாங்கம் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக அடையாளம் கண்டுள்ளது. - என்றார்.

## தடையை மீறி...

யாழ்.நகரின் மத்திய பகுதி கடைகள் மூடப்பட்டு, பொதுமக்கள் ஒன்றுகூடலை மட்டுப்படுத்தும் வகையில் போக்குவரத்து சேவையும் யாழ்.பண்ணை பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் தொற்று உறுதி செய்யப்படாதோரின் கடைகளை இன்று முதல் திறக்க அனுமதி அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அரச பஸ் சேவை யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள மத்திய பஸ் நிலையத்தில் செயற்படத் தொடங்கியுள்ளன. எனினும் பொலிஸார் இந்தச் செயற்பாட்டுக்கு தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக நேற்றுவரை பேணப்பட்டு வந்த நடைமுறையை இலங்கை போக்குவரத்துச் சபையினர் மீறி விட்டதாகவும், கட்டுப்பாட்டை மீறி நேற்று இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தமது சேவையை ஆரம்பித்தமைக்கு பொலிஸார் எதிர்ப்பை வெளியிட்டனர்.

எனினும் தனியார் பஸ் சேவைகள் அனைத்தும் அண்மையில் திறக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்தில் இடம்பெறுகின்ற நிலையில், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சேவை மாத்திரம் யாழ். நகரப் பகுதியில் சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறப்படாது இடம்பெறுகின்றமை விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## சமஷ்டி...

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத் தொகுதியில் உள்ள அரசமைப்பு நிபுணர் குழுவின் கலந்துரையாடல் மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற மேற்படி சந்திப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகத் தனது கருத்துக்களை முன்வைத்தது.

"நாட்டின் இன்றைய பேரழிவுச் சூழலுக்கும் பின்னடைவு நிலைக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பு முறைமையே காரணம். பொருளாதார ரீதியிலும், பிற விடயங்களிலும் இலங்கை தோற்றுப் போன நாடாகத் துவண்டு கிடப்பதற்கு ஒற்றையாட்சி முறைமையே முழுக்காரணமாகும்" என்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சுட்டிக்காட்டியது.

அந்தக் கூட்டணி சார்பில் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் சுரேஷ் பிறேமச்சந்திரன், கலாநிதி க.சர்வேஸ்வரன், எம்.கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், செல்வேந்திரா ஆகியோர் பங்குபற்றினர். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அங்கு முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு:-

"இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு என்பதை இலங்கை அரசு ஏற்று, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிக்கும் ஓர் அரசமைப்பு மூலமே நாட்டை மேம்படுத்த முடியும். தமிழ் மக்கள் மீது சிங்களவரின் பெரும்பான்மையின் மூலம் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்பு முறைமை பெரும் தோல்வி கண்டுவிட்டது. இன்று நாடு எதிர்கொண்டுள்ள பேரிழப்புக்களுக்கும், பின்னடைவுகளுக்கும் அவலங்களுக்கும் அதுவே - அது மட்டுமே காரணம். அதனால்தான் அதிலிருந்து வெளியே வருமாறு நாம் கோருகின்றோம்.

சமஷ்டியும் கூட்டாட்சியும் பிரிவினை அல்ல. ஒன்றுபட்டு, ஐக்கியமாக வாழ்வதற்குரிய உயரிய முறைமைகளே அவை. பாராளுமன்றுக்குப் பதில் கூறக்கூடிய பிரதமரின் கீழ் நிறைவேற்று அதிகாரம் பிரயோகிக்கப்படும் ஒரு முறைமை என்றால் அதன் கீழ் சமஷ்டி முறைமை அரசமைப்பையும் - அப்படியில்லாமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைத் தொடர்வதாக இருந்தால் கூட்டாட்சி முறைமை அரசமைப்பையும் ஏற்படுத்துவதே நாட்டின் மேன்மைக்கு ஒரே வழியாகும்.

உலக நாடுகள் பலவற்றிலும் பல்லின, பல்மொழி, பல் சமூக தேசங்களை ஒன்றிணைக்கும் உயரிய ஆட்சி முறையாக இந்த இரண்டுமே உள்ளன. சிறுபான்மை இனங்களையும் உள்வாங்கும் ஓர் அரசமைப்பை இலங்கை ஏற்படுத்த வேண்டும் என்றால் இந்த இரண்டில் ஒன்றுக்கு இணங்குவது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்."

## குடும்பத்துக்கு...

டுறவு நிறுவனங்கள் ஊடாக 1000 ரூபாவுக்கு சலுகைப் பொதி தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் போது இதனை தெரிவித்தார்.

12 பொருட்களை கொண்ட குறித்த 1000 ரூபா பொதியில் காணப்படுபவன உயர்தரம் கொண்டவை. இந்த பொதியில் 3 கிலோ அரிசி உள்ளது. அது குறைந்தது குடும்பம் ஒன்றுக்கு இரு வாரங்களுக்கு போதுமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் கருத்துப்படி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 71 கிராம் அரிசியே தேவைப்படும். அவரது கருத்து சமூக வலைதளத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஒருவருக்கு ஒரு மாதம் வாழ்வதற்கு ரூ.2500 போதுமானது என அமைச்சர் பந்துல குணவர்தன முன்னர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்...

கடைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் என இரண்டிலும் 607 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 28 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளர் விடுதியில் நால்வருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 9 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் 5 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

ஏனைய நால்வரும் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கு தொற்று கண்டறிப்பட்டது. இவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மாநகர கடைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆறு பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

மேலும், வவுனியா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகரில் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்தோரின் மாதிரிகள் சிறிஜெயவர்த்தனபுர ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவற்றின் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ)

## கொரோனா...

என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 591 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 93 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்றுப் புதன்கிழமை இரவு 10 மணி வரை 190 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதற்கமைய மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 93 ஆயிரத்து 962 ஆக உயர்வடைந்துள்ளது.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 90 ஆயிரத்து 917 பேர் குணமடைந்தோடு, 2267 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் மரணங்களின் எண்ணிக்கை 588 ஆக அதிகரித்துள்ளது. (அ-எ)

## மாநகர...

பொலிஸ் நிலையப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசாரணை நேற்று நள்ளிரவு வரை மூன்று மணி நேரமாக நீடித்தது எனத் தெரியவந்தது.

யாழ்.மாநகரில் சுகாதார நடைமுறைகளை கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறையை கண்காணித்தல் மற்றும் மாநகரின் ஒழுங்கு உள்ளிட்டவற்றை கண்காணிப்பது, தண்டப்பணத்தை அறவிடுவதற்காக குறித்த மாநகர பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டது.

குறித்த மாநகர பாதுகாப்புப் படை இன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ள நிலையில் நேற்றுக் காலை பரீட்சார்த்தமாக நல்லூர் சுற்றாடலில் பணியில் ஈடுபட்டது.

யாழ். மாநகர சுகாதார பணிமனைகளில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் 5 பேரை, புதிய சீருடையொன்றை அறிமுகம் செய்து, மாநகர காவல் படையென்ற பெயரில் யாழ் மாநகரசபை உருவாக்கியது.

இந்த ஐவருமே நேற்று யாழ்.பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களுடன் யாழ். மாநகர சபை ஆணையாளர், பிரதம வருமான வரிப் பரிசோதகர் ஆகியோரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

மாநகரக் காவல் படையின் சீருடையை உடனடியாக பொலிஸ் நிலையத்தில் கையளிக்குமாறு கூறப்பட்டதாகவும் தெரியவந்தது.

## 11 இஸ்லாமிய...

வாதக் கொள்கைகளுடன் தொடர்புடையவை என்று கூறப்பட்டது.

நேற்று தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் 2019 ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலை நடத்திய சஹ்ரான் ஹாசிமின் அடிப்படை வாத அமைப்பான சிலோன் தௌகித் ஜமாஅத் மற்றும் சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். ஐ. எஸ். என்று அறியப்பட்ட ஈரான் - சிரியா இஸ்லாமிய தேசம் அமைப்பு என்பனவும் உள்ளன.

தவிர, ஐக்கிய தௌஹீத் ஜமாஅத், சிறிலங்கா தௌஹீத் ஜமாஅத், அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத், ஜம்இய்யதுல் அன்சாரி சுன்னத்துல் மொஹமதியா, தாருல் அதர்-ஜம்உல் அதர், சிறிலங்கா இஸ்லாமிய மாணவர் சங்கம் -ஜமியா, அல்கொய்தா, சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு, சுப்பர் முஸ்லிம் அமைப்பு ஆகியன இடம்பெற்றுள்ளன. (ஐ)

## தொற்றாளர்கள்...

கள் மட்டுமே அடையாளம் காணப்படுவதாக கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதேவேளை, குறைந்துவரும் தொற்று வீதத்துக்கு இணையாக பி.சி.ஆர் பரிசோதனைகள் படிப்படியாக குறைக்கப்படுகின்றனவே அன்றி பரிசோதனைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதனால் நோயாளிகளின் எண்ணிக்கை குறையவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ)

## பிரபாகரனின்...

வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் விசாரணைகளின் பின்னர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் வெறுப்பைத் தூண்டுதல் அல்லது எத்தனித்தலின் கீழ் இளைஞன் மீது பி அறிக்கையை கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

இளைஞன் சார்பில் மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் முன்னிலையானார்.

வழக்கை விசாரித்த நீதிவான் இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்து இளைஞனை எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, இளைஞனின் அலைபேசியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் ஒளிப்படம் உள்ளமை தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

**1984** ஒக்ரோபர் 31 இந்திரா காந்தி அம்மையார் தனது பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி யாழ்ப்பணம் எங்கும் சோகத்தில் ஆழ்த்தியிருந்தது.

அன்று இரவுக் கடமைக்கு வரவேண்டிய இந்த ஊர்க்குருவி, செய்தியை அறிந்ததும் உடனே ஈழநாடு அலுவலகத்திற்கு வந்து சேர்ந்திருந்தார். அப்போது நேரம் பிற்பகல் இரண்டு மணி.

பத்திரிகையின் செய்தி ஆசிரியர் காலை அலுவலகம் வந்து, நண்பகலில் வீட்டுக்குப் போய்விடுவார். மாலை ஆறு மணியளவில் மீண்டும் வந்து இரவு பணிகளைக் கவனிப்பது அவரது வழக்கம்.

இந்த ஊர்க்குருவி பத்திரிகைத்துறையில் நுழைந்த சில வருடங்கள்தான் ஆகியிருந்தன. அன்று அலுவலகம் வந்து சேர்ந்தபோது விநியோகப் பகுதிக்கு பொறுப்பாக இருந்த ஐயா சச்சிதானந்தம், (பிற்காலத்தில் ஊடகவியலாளராக மறைந்தவர்) அலுவலகத்தில் இருந்தார்.

அவரிடம் உடனடியாக ஒரு சிறப்புப் பதிப்பை வெளியிட்டால் என்ன என்று யோசனை கேட்டபோது அவரும் நல்ல யோசனை என்று சொல்ல, அப்போது பொதுமுகாமையாளராக இருந்த சீனிவாசகம் மாஸ்ரர் அனுமதி தர, அவசரம் அவசரமாக சிறப்புப் பதிப்பு நான்கு பக்கங்களில் தயாராகி நகரத்தில் விற்பனைக்கு சென்றுவிட்டது.

இப்போது போல இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் என்று எதுவும் இல்லாத காலம். பத்திரிகைகளே மக்களுக்கு செய்திகளை அறியக் கிடைக்கும் ஒரே தளம்.

சிறப்பு பதிப்பு வெளிவந்த விடயத்தை கேள்விப்பட்ட ஈழநாடு வாசகர்கள் அலுவலகத்திற்கு படையெடுக்கத் தொடங்கிவிட்டனர்.

பரபரப்பாக அன்னை இந்திரா படுகொலை செய்தியைத் தாங்கிய ஈழநாடு சிறப்புப் பதிப்பு விற்பனையாகி முடிந்திருந்தது.

மாலை ஆறு மணிக்கு மீண்டும் வேலைக்கு வந்த செய்தி ஆசிரியருக்கு மனதுக்கு மிகப்பெரிய உறுத்துதல். தான் செய்திருக்கவேண்டிய வேலையை வேறு யாரோ செய்துமுடித்திருந்தது அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அது இயல்பானதும் தானே.

இது நடந்து ஒரு வாரம் கடந்திருக்கும். அப்போது நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே ஜனாதிபதியாக இருந்த றொனால்ட் றீகன் இரண்டாவது தடவையாக வெற்றிபெற்றார்.

தேர்தல் முடிவு வெளிவந்த அன்று செய்தி ஆசிரியர் சிறப்புப்பதிப்பு ஒன்றை வெளியிட்டு தனது 'ஆளுமையை' நிரூபித்துக் காட்டினார். அந்தப் பதிப்பு எந்த பத்திரிகை விற்பனை கடையிலும் விற்பனையாகவில்லை என்பது வேறு கதை.

நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ கட்சியினர் பிரிட்டன் தூதுவரைச் சந்தித்திருந்தனர்.

ஐ. நா. விடயங்கள், அரசியல் தீர்வு, மாகாண சபை தேர்தல்கள், நில அபகரிப்பு, இளையோர் மற்றும் பெண்கள் பங்களிப்பு, அபிவிருத்தி ஆகிய பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக நடந்த பேச்சுக்கள் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்ததாம். இந்தச் சந்திப்பு பற்றிய செய்தியைப் படித்தபோது ஈழநாடு சிறப்பு பதிப்பு விடயம்தான் ஞாபகத்திற்கு வந்தது.

சுமந்திரன் மட்டும்தான் இதுபோன்ற சந்திப்புக்களை நடத்தியதாக இதுவரை நாமும் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையில் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னரே அவர் பல தூதரகங்களின் வாசல்களில் ஏறி, இறங்கினார். என்ன கோரிக்கையை தமிழ் மக்கள் சார்பில் அவர் முன்வைத்தார் என்பது அவருக்கு மாத்திரமே வெளிச்சம். ஆனால், சந்திக்கவேண்டிய நேரத்தில் சந்தித்தார் என்பதை கவனிக்கவேண்டும்.

சுமந்திரனின் பேச்சாளர் பதவியில் கண்வைத்திருக்கும் செல்வமும் இப்போது தானும் பேச்சாளராக ஆகவேண்டும் என்றால் இப்படி தூதரகங்களை ஏறி, இறங்கவேண்டும் என்று நினைத்தாரோ தெரியவில்லை.

இது நல்ல விடயம்தான், ஆனால், இன்று நாங்கள் தட்ட வேண்டியது இந்தியத் தூதரகத்தின் கதவைத்தான் என்பதை முதலில் இவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தூதரகங்களை ஏறவேண்டிய நேரத்தில் ஏறி, இறங்கிய சுமந்திரன்கூட ஏனோ தெரியவில்லை அப்போது இந்தியத் தூதரகத்திற்கு செல்லவில்லை. தூதரகத்தின் முகவரி அவருக்கு தெரியாதோ, தெரியவில்லை.

தமிழ் அரசுக்கட்சி, பங்காளிக் கட்சிகளை கலந்தாலோசிக்காமல் நடந்து கொள்கின்றது என்று குற்றம்சாட்டுகின்ற பங்காளிக் கட்சிகள், தாமும் அதையே செய்ய நினைப்பதும் தவறான முன்உதாரணம்தான்.

**- ஊர்க்குருவி.**

# யாழ். மத்திய நகரில் மூடப்பட்ட கடைகள் இன்று திறக்கப்படும்!

### *75 கடைகளுக்கு மறுப்பு என்கிறார் மாநகர முதல்வர்!*

**யாழ்ப்பாணம்,ஏப்.08**

**யாழ். நகரின் மத்திய பகுதியில் மூடப்பட்டவற்றில் பெரும்பங்கு கடைகள் இன்று திறக்கப்படும் என்று மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாநகர சபை அலுவலகத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

மேலும், கடந்த 26 ஆம் திகதியிலிருந்து யாழ். மாநகர வியாபாரிகளிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால், மூடப்பட்ட வர்த்தக நிலையங்களில் சுமார் 75 கடைகள் தவிர, ஏனைய கடைகள் நாளை (இன்று) திறக்கப்படும் - என்றார்.

மேலும், நேற்று காலை யாழ் மாநகர சபை பொது வைத்திய அதிகாரி தலைமையில் நடந்த கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறினார். ஏற்கனவே பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் தவிர்ந்த அரைவாசிக்கு மேற்பட்டோரின் கடைகள் இன்று முதல் திறப்பதற்கு அனுமதிக்கப்படும்.

எனினும், போக்குவரத்து சேவைகள் தற்போது உள்ளமை போன்று பண்ணை பகுதியிலேயே தொடர்ந்தும் இயக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பான இறுதி முடிவுகள் வரும் நாட்களில் கூடி ஆராயப்படும் என்றும் முதல்வர் சொன்னார். (ஐ-3)

## வெட்டுக் காயங்களுடன் இளைஞன் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஏப். 08

வெட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தை நேற்று கொழும்பு பொலிஸார் மீட்டனர்.

கல்கிசை பொலிஸ் பிரிவில் - காலி வீதியில் வீடு ஒன்றின் அருகிலேயே இந்த சடலம் மீட்கப்பட்டது.

வெட்டுக் காயங்களுடன் ஒருவர் கிடப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்தனர். அவரை மீட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்தமை அறியப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே பகுதியை சேர்ந்த 22 வயது இளைஞர் என்று தெரிய வருகின்றது. சடலம் பிரேத பரிசோதனைக்கா களுபோவில போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஓய்வு பெற்ற சி.ஐ.டி.யினர் மீண்டும் சேவைக்கு!

கொழும்பு, ஏப். 08

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற திறமையான அதிகாரிகளை மீண்டும் பணியில் இணைத்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்?ஷ தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் என்பது, திறமையான அதிகாரிகள் இருக்கும் இடம் என்றும், இதனால் ஓய்வுபெற்ற அதிகாரிகளின் சேவைகள் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி ஓய்வுபெற்ற திறமையான அதிகாரிகள் மீண்டும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

## இலங்கைக்கு மேலே சூரியன்!

கொழும்பு, ஏப். 08

கடந்த திங்கட்கிழமை முதல் ஏப்ரல் 14 ஆம் திகதி வரை சூரியன் இலங்கையின் மேலாக உச்சம் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, நேற்று சூரியன் மேல் இருக்கும் அருகிலுள்ள பகுதிகள் கொழும்பு, மல்வான, கொஸ்கம, சீதவாக்க, மால்தெனிய, ரொசெல்ல, தலாவாக்கல்லை, சீதாஎலிய, எட்டம்பிட்டிய, பசறை ஆகிய பகுதிகளின் மேலாக மதியம் 12:13 மணியளவில் சூரியன் உச்சம் கொடுத்தது.

இதற்கிடையில், மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்கள் மற்றும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மாலை அல்லது இரவில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த பகுதிகளில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான கனமான வீழ்ச்சியை எதிர்பார்க்கலாம்.

## காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடிய தந்தை ஒருவர் மரணம்!

வவுனியா, ஏப். 08



காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி வந்த மற்றொரு தந்தையும் நேற்று காலமானார்.

இவ்வாறு மரணமானவர் வவுனியா தாலிக்குளத்தை சேர்ந்த சந்தனம் ராகவன் (வயது 65) என்பவராவார்.

இவரது மகன் கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். இவரை தொடர்ச்சியாக தேடி வந்த தந்தை, வவுனியாவில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களிலும் பங்கேற்று தனது மகன் தொடர்பிலும் - காணாமல் ஆக்கப்பட்டோருக்காகவும் குரல் எழுப்பி வந்தார்.

இந்நிலையில், சுகயீனம் காரணமாக தனது மகனைக் காணாமலேயே அவர் நேற்று காலமானார்.

இவருடன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உறவுகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 70 வரையிலானோர் தமது உறவுகளை தேடி வந்த நிலையில் மரணமாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்
**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.04.2021 வியாழக்கிழமை
சார்வரி, பங்குனி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# பெரும்பான்மைதான் அரசாங்கத்தின் பலவீனமா?

அண்மைக்காலமாக ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்குள் அவ்வப்போது உட்சிக்கல்கள் எட்டிப்பார்க்கின்றன. சிங்கள ஊடகங்களிலும் இது அவ்வப்போது செய்தியாகின்றது. தற்போது இருக்கின்ற அரசாங்கம் தனிச்சிங்கள பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்திருக்கின்ற அரசாங்கம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் வேறு எந்தவோர் அரசாங்கத்துடனும் ஒப்பிட முடியாதளவிற்கான சிங்கள ஆதரவை இந்த அரசாங்கம் பெற்றிருக்கின்றது. சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் முகங்களாக காட்சி தரும் அனைத்து தரப்பினரதும் ஆதரவை இந்த அரசாங்கம் பெற்றிருக்கின்றது. இவ்வாறான ஆதரவை பெற்றிருந்தமையால்தான், தனிச்சிங்கள ஆதரவுடன் வெற்றிபெறவும் முடிந்தது. ஆங்காங்கே சிதறிக்கிடந்த அனைத்து சிங்கள கடும்போக்கு தேசியவாத சிறு கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், பிக்குகள் என அனைவரும் இந்த அரசாங்கத்தின்கீழ் அணிதிரண்டிருக்கின்றனர்.

இதன் காரணமாக அனைவருமே அரசாங்கத்தின் ஆலோசகர்களாகவும், அரசாங்கத்தை தாங்கிப் பிடிக்கும் தூண்களாகவும் தங்களை காண்பித்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு விடயங்களிலும் அரசாங்கத்தின் பேச்சாளர்கள் போன்றே கருத்துக்களை தெரிவிக்கின்றனர். ஜனாதிபதியையும் எச்சரிக்கின்றனர். இந்த பின்புலத்தில் நோக்கினால், அரசாங்கத்தின் பலமென்று எது நோக்கப்பட்டதோ அதுவே தற்போது அரசாங்கத்தின் பலவீனமா - என்னும் கேள்வி எழுகின்றது. ஏனெனில், பல வகையானவர்களின் ஆதரவுடன் பெரும்பான்மை பலத்தை பெற்றிருப்பதால் தற்போது அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டிய இக்கட்டான நிலைமைக்குள் அரசாங்கம் சென்றிருக்கின்றது.

இந்த பிரச்னைகளின் முதலாவது குரலாக வெளிப்பட்டவர்தான், அரசாங்கத்தின் பலமான குரலாகவும் சிங்கள தேசியவாதத்தின் பலமான குரலாகவும் தன்னை அடையாளப்படுத்தியிருக்கும் விமல் வீரவன்ச. அவர் தற்போது வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்றார் - நான் அரசாங்கத்தையும் ஆட்சியையும் தீர்மானிக்கும் பலமான சக்தியாவேன். 2015இல் ஏற்பட்ட தோல்வியை தொடர்ந்து, மெதமுல்லவில் முடங்கிக்கிடந்த மகிந்த ராஜபக்ஷவை கொழும்பிற்கு அழைத்து வந்து மாபெரும் பேரணியை நடத்தியவன் நான். ஜனாதிபதி வேட்பாளர் யாரென்னும் கேள்வி எழுந்தபோது, கோட்டாபய ராஜபக்ஷதான் பொருத்தமானவர் என்று கூறியவன் நான். அப்போது பலரும் கட்சிக்குள் மாறுபட்ட அபிப்பிராயங்களுடன் இருந்தனர். இதனை ஜனாதிபதியும் பிரதமரும் மறக்கமாட்டார்கள். உண்மையிலேயே விமல் வீரவன்ச ராஜபக்ஷக்களின், அரசியல் முகாமை பொறுத்தவரையில், ஒரு பலமான குரலாக இருந்த ஒருவர்தான். ஆனால், அவ்வாறான ஒருவருக்கும் கட்சிக்குமிடையில் ஏன் முரண்பாடுகள் ஏற்பட்டன?

பெரும்பான்மை இருந்தால் அரசாங்கம் முடிவுகளை மேற் கொள்வதற்கு இலகுவாக இருக்குமென்று கருதுவதுண்டு ஆனால், அந்தப் பெரும்பான்மை பலரை இணைத்துக் கொள்வதன் மூலமாக வருமாயின் அதுவே அரசாங்கத்திற்கான நெருக்கடியாகவும் மாறிவிடும் என்பதையே பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் நிலைமை நமக்குணர்த்துகின்றது. இதனை அரசாங்கம் எவ்வாறு சமாளிக்கப் போகின்றது என்பதில்தான் இந்த அரசாங்கத்தின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. வெறுமனே தமிழர் பிரச்னையை மட்டும் வைத்துக்கொண்டு தென்னிலங்கையை கையாள முற்படும் அரசியல் அணுமுறை பெருமளவிற்கு காலாவதியாகிவிட்டது. அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தி வாய்ந்தவன் நானே என்று கூறும் இன்னும் பலரும் காலப்போக்கில் வெளியில் வரக்கூடும். அப்போது இன்னும் நிலைமை மோசமடையலாம்.

# வில்பத்து முதல் சிங்கராஜ வரை!

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கையில், அரசியல் நடவடிக்கைகளினால் பெரும் பிச்னைகள் ஏற்பட்டுள்ள அதேசமயம் தற்போது, இலங்கையின் தரையமைப்பு, காலநிலை சீரற்ற தன்மைகளிலும் தமது சுயநல நோக்கங்களுக்காக பிரச்னைகளை ஏற்படுத்துவதில் ஆட்சியதிகாரங்களில் இருப்போர் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் காடழிப்பு என்ற விடயம் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதை காணமுடிகின்றது.*

*இலங்கையின் இயற்கை அழகு உலகறிந்த தொன்றாகும். ஒரு குறிப்பிட்ட சில மணி நேரத்தில் இலங்கையின் அனைத்து விதமான தரைத்தோற்றத்தையும், பலதரப்பட்ட காலநிலை அம்சங்களையும் கண்டு அனுபவிக்கக் கூடிய சூழலைக்கொண்டதாக இலங்கையின் தரையமைப்பு காணப்படுகின்றது. ஆனால், இலங்கையில் சுற்றுலா பயணத்துறை விரிவடைய ஆரம்பித்ததையடுத்து, கண்மூடித்தனமாக இலங்கையின் தரையமைப்பும் சீண்டப்பட்டு, இயற்கைச் சமநிலைக்கு வேட்டு வைக்கும் நடவடிக்கைகளும் விரிவடைய ஆரம்பித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

**வில்பத்து காடழிப்பு**

*ஒருசில வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் வடமேற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள வில்பத்து காட்டுப் பகுதியை அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. வில்பத்து இலங்கையின் புவியியல் மற்றும் காலநிலை சமநிலையைப் பேணுவதில் ஒரு முக்கிய வெப்பவலய காடாக இருப்பதை அறிந்த நிலையில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே 1,317 கி. மீ விஸ்தீரணம்கொண்ட வில்பத்து காட்டுப் பிரதேசம், ஒரு தேசிய வனப்பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்தது.*

*வில்பத்து காட்டுப் பிரதேசம் யானைகள், மானினங்கள் உட்பட, சிறுத்தைப் புலிகளுக்கும் மயில்கள் உட்பட ஏராளமான பலதரப்பட்ட பறவையினங்களுக்கும் உகந்த வெப்ப-தப்ப நிலையைக்கொண்டதாக காணப்படுகின்றது. வடக்கு-கிழக்கு யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் வில்பத்து கானகப்பகுதி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வனவிலங்கு ஆர்வலர்களின் சொர்க்கபுரியாக இருந்தது. இருந்தபோதிலும், வில்பத்து வனப்பிரதேசம் மன்னார் மற்றும் வன்னி காடுகளின் சில பகுதிகளையும் இணைப்பதன் காரணமாக, யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மன்னாருடன் வில்பத்து வனப்பகுதி இணையும் பகுதியையும் தமது கட்டுப்பாட்டின் கீழே வைத்திருந்தனர்.*

**புலிகளின் மறைவிடம்**

*1985ஆம் ஆண்டு மே மாதம் அநுராதபுரத்திலுள்ள புனித போதி மரக்கிளைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆண்கள்,பெண்கள், சிறுவர்கள் உட்பட 146 பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இத்தாக்குதலை இராணுவச் சீருடையைப்போன்ற சீருடை தரித்தவர்களாக வந்தே புலிகள் மேற்கொண்டிருந்தனர். இதன் பின்னர் தாம் வந்த பஸ் வண்டியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அநுராதபுரம்-புத்தளம் வீதி வழியாகச்சென்று வில்பத்துக்காட்டுக்குள் நுழைந்து பின்னர் அங்கிருந்தே அவர்கள் மன்னாரைச் சென்றடைந்தனர்.*

*ஆனால், தற்போது வில்பத்து காட்டுப்பிரதேசம் மீளவும் வனவிலங்கு ஆர்வலர்களுக்குரிய பிரதேசமாக மாறியுள்ள நிலையில், வில்பத்து கானகத்தின் வடமேற்கு பிரதேசத்தில் காடழிப்புடன்கூடிய குடியேற்றங்கள் அண்மைக் காலங்களில் விரிவடைந்திருந்ததையே அவதானிக்க முடிந்தது. முன்னைய அரசாங்கத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த ஒரு முஸ்லிம் அமைச்சர் ஒருவரே வில்பத்து கானகப் பிரதேசத்தில் காடழிப்பில் மும்மரமாக ஈடுபட்டிருந்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.*

*அத்துடன், காடழிப்புக்குள்ளான பிரதேசங்களில் புதிய குடியேற்றங்களையும் அந்த முன்னாள் அமைச்சர் ஏற்படுத்தினார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இக்குடியேற்றங்கள் ஊடாக இந்தியாவுடன் போதைவஸ்து கடத்தலை மேற்கொள்ளக் கூடிய சூழல்களும் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.*

**சிங்கராஜ மழைக்காடு**


*எனவே, வில்பத்து காடழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டு அதன் விரிவாக்கம் தற்பொது பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள நிலையிலேயே தற்போது இலங்கையின் தென் மேற்கே அமைந்துள்ள சிங்கராஜ பிரதேசத்தில் காடழிப்பு நடவடிக்கை மும்முரமடைந்துள்ளது. 111.9 கி. மீ. விஸ்தீரணம்கொண்ட சிங்கராஜ கானகப்பிரதேசம், இலங்கையில் உள்ள மிக ஆரோக்கியமான மழைக்காட்டுப்பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே மிக அரிய வகையான விலங்கினங்கள், பறவையினங்கள் என்பவை காணப்படுகின்றன.*

*சிங்கராஜ காட்டுப் பகுதியும் உள்ளநாட்டு, மற்றும் வெளிநாட்டு வனவிலங்கு மற்றும் தாவரவியல், உயிரியல் ஆர்வலர்களின் விருப்புக்குரிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், இக் கானகப்பகுதியிலும் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல்கள் கட்டுவதில் அரசியல் செல்வாக்குடையோர் ஈடுபட்டுள்ளமையே தற்போது பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.*

*ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனத்தினால் ஒரு பாரம்பரிய கானக பிரதேசமாகவும் சிங்கராஜ கானகம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், 2016ஆம் ஆண்டு முதல் சிங்கராஜ வனப்பகுதி ஊடறுக்கப்பட்டு, கானகத்தின் ஆரோக்கியமான தாவர மற்றும் உயிரியல் சூழலைக்கொண்ட பகுதிகளிலேயே புதிய ஹோட்டல்கள் அரசியல் செல்வாக்கு கொண்டோரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*சுமார் 400 ஹெக்டயர் ஏக்கர் பிரதேசம் சிங்கராஜா காட்டுப்பகுதிகளுக்குள் காடழிப்புக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக, பல அரிதான விலங்குகள் மற்றும் பறவையினங்கள் மட்டுமல்ல. தாவர வகைகள், நீர்வாழ் உயிரினங்கள் என்பனவும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
வருமானம் உயரும். வருங்காலத் திட்டங்கள் நிறைவேறும். பெருமிதப் பொறுப்புகள் தேடி வரும். உள்ளூரில் மதிக்கப்படுவீர்கள். சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**இடபம்**
போனஸ் வகைகளால் பணம் வரும். மகிழ்ச்சி உண்டு. உறவுகளுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்**
சேமிக்கத் தொடங்குவீர்கள். மனதிடம் அதிகரிக்கும். பணவரவு மனநிறைவளிக்கும். இழந்த நிம்மதி மீளும். நல்லது செய்வதற்கும் தீய வழியை நாட வேண்டாம்.

**கடகம்**
வீண்பழி வரக்கூடிய நாள் என்பதால் கவனமாக இருங்கள். வருமானம் உயரும். பிறரிடம் நன்றி உணர்வை எதிர்பார்க்க வேண்டாம். கணவன் மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும்.

**சிம்மம்**
உற்சாகம் உயரும். பிரச்னைகள் விலகும். காதல் இனிக்கும். மனபாரமும், கடனும் குறையும். பணவரவு போதுமானதாக இருக்கும். குழந்தை வரம் வேண்டியவர்களுக்கு அழகான வாரிசு உருவாகும்.

**கன்னி**
வேலையில்லாதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். தொழில், பணியில் இருந்த பின்னடைவுகள் நீங்கி நிம்மதி தரும். வீட்டில் உள்ள பெரியவர்களின் ஆரோக்கியம் மேம்படும்.

**துலாம்**
தள்ளிப்போன நேர்த்திக்கடனை உடனே முடிப்பீர்கள். வீண்பழி, மனஅழுத்தம், விரயம், விரக்தி ஆகியவை மறையும். பல வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும்.

**விருச்சிகம்**
தம்பதிகள் தேவையற்ற பிரச்னை வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். பயணங்கள் அதிகமானாலும் சலிப்பில்லாத உற்சாகம் உண்டு. உங்களின் சமீபத் திய செயலால் நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும்.

**தனுசு**
பிள்ளைகள் முன்பைவிட நல்ல புரிதலுடன் பேசுவது ஆறுதல் தரும். உயர்கல்வி, பணியின் பொருட்டு பிள்ளைகள் உங்களைப் பிரிவார்கள். சிறு சிறு செலவுகள் இருக்கும். வேண்டுதல்கள் நிறைவேறும்.

**மகரம்**
திடீர் பணவரவு உண்டு. சகோதரர் பக்கபலமாக இருப்பார். சகோதரருடன் இருந்த பனிப்போர் மறையும். மகிழ்ச்சி கூடும். குடும்பத்தினருடன் கொஞ்சம் அனுசரித்துப் போவது நல்லது.

**கும்பம்**
போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று மகிழ்வீர்கள். துணிச்சலான முடிவுகள் எடுப்பதன் மூலம் நன்மை அடைவீர்கள். மற்றவரை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது.

**மீனம்**
சிலருடன் நட்பு வேண்டாம் என்று முடிவெடுப்பீர்கள். வீட்டைச் சீரமைப்பதில் செலவு கூடும். பயம் நீங்கி நிம்மதி வரும். குடும்ப விவகாரங்கள் சீராகப் போகும். வேலைச்சுமை கூடும்.

# தமிழக சட்டசபை தேர்தலில் 72.78 வீத வாக்குகள் பதிவு!

## தேர்தல் ஆணையகம் உத்தியோகபூர்வ அறிவிப்பு

சென்னை, ஏப். 08

தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றுள்ள நிலையில் வாக்கு வீதம் தொடர்பான உத்தியோகபூர்வ தகவலை மாநில தேர்தல்ஆணையகம்வெளியிட்டுள்ளது.

சட்டமன்றத் தேர்தல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்று முடிந்துள்ள நிலையில், தேர்தலில் 72.78 வீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹ நேற்று தெரிவித்துள்ளார்.

மேலும், அதிகபட்சமாக பாலக்கோடு தொகுதியில் 87.33 வீத வாக்குப் பதிவும் குளித்தலையில் 86 வீத வாக்குப் பதிவும் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், ஆகக் குறைந்த வாக்குப்பதிவாக சென்னை மாவட்டம் வில்லிவாக்கம் தொகுதியில் 55.52 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன. இதேவேளை, தமிழக முதல்வர் எடப்பாடி பழனி சாமி போட்டியிட்ட எடப்பாடி தொகுதியில் 85.6 வீத வாக்குகளும், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் போட் டியிட்ட கொளத்தூர் தொகுதி யில் 60.52 வீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

# வாக்கு எண்ணும் மையத்திற்கு கமல்ஹாசன் திடீர் விஜயம்!



சென்னை, ஏப். 08

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், கோவையில் தான் போட்டியிட்ட கோவை தெற்கு தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு கள விஜயம் மேற்கொண்டுள்ளார்.

கோவை தெற்கு தொகுதியில் கமல் ஹாசனை எதிர்த்து பாரதிய ஜனதா தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன், காங்கிரஸ் மாநில செயல் தலைவர் மயூரா ஜெயக்குமார் ஆகியோர் போட்டியிடுவதால் கடும் போட்டி நிலவியது.

இந்த நிலையில், நேற்றுக் காலை வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையமான தடாகம் வீதியில் உள்ள அரசு தொழில்நுட்ப கல்லூரியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப் பட்டுள்ள அறை வரை சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் கோவை தெற்கு தொகுதியில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைக்கு சென்ற கமல்ஹாசன், அங்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக இருக்கிறதா என ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து ஏனைய தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையையும் கமல்ஹாசன் பார்வையிட்டுள்ளார்.

# வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

## தேர்தல் அதிகாரிக்கு திருமாவளவன் வலியுறுத்தல்

சென்னை, ஏப். 08

வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் மக் களவை உறுப்பினருமான தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, தொல். திருமாவளவன் வெளியிட்ட அறிக்கையில்-

தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு பெரும்பாலும் அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளது. ஒரு சில இடங்களில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டு சரி செய்யப்பட்டது. எனினும், எந்த ஒரு இடத்திலும் வாக்குப்பதிவு நிறுத்தப்பட வில்லை.

சிறப்பான முறையில் வாக்குப்பதிவு நடத்தி முடித்ததற்காகத் தலைமை தேர்தல் அதிகாரியையும் தேர்தல் பணியில் ஈடுபட்ட ஊழியர்களையும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பாராட்டுகிறோம்.

அதேநேரத்தில், வாக்கு எண்ணப்படும் மையங்களில் வைக்கப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பை தலைமைத் தேர்தல் அதிகாரி உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

கோடை வெயில், கரோனா பாதிப்பு ஆகியவற்றுக்கு இடையில் சுமார் 75 வீத வாக்காளர்கள் வாக்குச்சாவடிகளுக்கு வந்து தமது வாக்குரிமையை நிலைநாட்டி இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போது சட்டப்பேரவைத் தேர்தல் நடத்தப்பட்ட அசாமில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாஜக வேட்பாளரின் காரிலேயே கொண்டுசெல்லப்பட்டதையும் அந்த காரை மடக்கிப் பிடித்ததற்காக பொதுமக்கள் மீதே வழக்கு போடப்பட்டிருப்பதையும் பார்த்தோம். அத்தகைய நிலை தமிழ்நாட்டில் ஏற்படக்கூடாது-என்றார்.




# கரூர் மாவட்டத்தில் அதிக வாக்குப்பதிவு

சென்னை, ஏப். 08

தமிழக சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல் வாக்குப்பதிவில் கரூர்மாவட்டம் 83.92 சதவீத வாக் குப்பதிவுடன் மாநில அளவில்முதலிடம்பெற்றுள்ளது. தொகுதி வாரியான வாக்குப் பதிவில் குளித் தலை தொகுதி 86.15 சதவீத வாக் குப்பதிவுடன் மாநில அளவில்2ஆம்இடம்பெற்றுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்தே கரூர் தொகுதி மற்றும் மாவட்டம் தமிழக அளவில் கவனம் ஈர்த்து வந்தது. தேர்தல் ஆணையத்திற்கு தமிழக அளவில் அதிக புகார்கள் வரப்பெற்ற தொகுதி மற்றும் மாவட்டமாக கரூர் இருந்தது. 77 வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதியாக கரூர் மாநில அளவில் கவனமும் பெற்றது. தற்போது 83.92 சதவீத வாக்குப் பதிவுடன் தமிழக அளவில் அதிக வாக்குகள் பதிவான மாவட்டம் என்ற பெருமையோடு முதலி டத்தைப் பிடித்துள்ளது.

4 தொகுதிகளிலும் சேர்த்து கரூர் மாவட்டத்தில் மொத்தம் 4,31,934 ஆண், 4,64,699 பெண், 80 இதரர் என மாவட்டத்தில் மொத்தம் 8,96,713 வாக்காளர்கள் உள்ளனர். இதில், 83.92 சதவீத வாக்குப் பதிவுடன் தமிழக அளவில் அதிக வாக்குகள் பதிவான மாவட்டம் என்ற பெருமையோடு, கரூர் மாவட்டம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சித்திவிநாயகர் பாடசாலையில் திறன் விருத்தி வகுப்பறை நேற்று திறப்பு



மன்னார், ஏப். 08

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்ட 4 திறன் விருத்தி வகுப்பறைகள் நேற்று காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வி தேர்ச்சியை அதிகரிக்கும் முகமாகவும் நவீன தொழில் நுற்ப முறைகள் மூலம் கற்கைகளை மேற்கொண்டு நாடத்தவும் அமைக்கப்பட்ட திறன் விருத்தி வகுப்பறைகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பாடசாலை பிரதி அதிபர் பி.எல். குரூஸ் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது விருந்தினராக கலந்துகொண்ட மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.ஜே. பிறட்லி நேற்றுக் காலை 9.30 மணியளவில் வைபவ ரீதியாக வகுப்பறைகளை திறந்துவைத்தார்.

லண்டன் பழைய மாணவர் சங்கம் மற்றும் மனித நேய நம்பிக்கை நிதியத்தின் நிதி உதவியுடன் நான்கு திறன் அபிவிருத்தி வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் கே.ஜே. பிறட்லி , சிறப்பு விருந்தினர்களாக மன்னார் கோட்ட கல்விப் பணிப்பாளர் பு.சந்தியோகு , மனித நேய நம்பிக்கை அமைப்பின் உறுப்பினர்கள், நலிவுற்றோர் நலன் காப்பு நிதிய அதிகாரிகள் , சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையில் உப அதிபர் பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நௌபர் மௌலவியா பிரதான சூத்திரதாரி?

## ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம்

கொழும்பு, ஏப்.08

**ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்பது அரசாங்கத்தினால் புனையப்பட்ட கதையாகக் கூட இருக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்?ஷ்மன் கிரியெல்ல சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியின் சர்வதேச சக்திகள் இருப்பதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள போதிலும், இது வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இதுதொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் எந்த தகவலும் வெளியிடப்படவில்லை. பிரதான சூத்திரதாரி பற்றியும் இல்லை.

இந்நிலையில் தாக்குதல் நடைபெற்று 2 வருடங்கள் நெருங்கும்வேளை பிரதான சூத்திரதாரியொருவரின் பெயர் நேற்று (செவ்வாய்) திடீரென வெளியிடப்பட்டுள்ளது.

நௌபர் மௌலவி என்பவர் 2019 ஏப்ரல் மாதத்தில் கைது செய்யப்பட்டிருந்தாலும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியளிக்கவில்லை. இது ஏன்?

கொழும்பு பேராயர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பும் பிரதான சூத்திரதாரி குறித்து கேள்வி எழுப்புவதால் அரசாங்கத்துக்கு அழுத்தம் ஏற்பட்டுள்ளது. அந்த அழுத்தங்களில் இருந்து தப்பிப்பதற்காகவே நௌப்பர் மௌலவியின் பெயரை வெளியிட்டிருக்கலாம்-என்றார்.

# 1000 ரூபா வழங்குவது கம்பனிகளின் கடப்பாடு!

கொழும்பு, ஏப். 08

பெருந்தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த வேதனத்தை 1000 ரூபாவாக நிர்ணயித்து வெளியிடப்பட்ட அரசாணைக்கு எதிரான மனு குறித்த விசாரணை நிறைவடையும் வரையில், தொழிலாளர்களுக்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் 1000 ரூபாவை நாளாந்த வேதனமாக வழங்க வேண்டும்.

அவ்வாறு வழங்காத பட்சத்தில் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழில் ஆணையாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

குறித்த வர்த்தமானிக்கு எதிராக 20 பெருந்தோட்ட நிறுவனங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ள நிலையில், குறித்த வர்த்தமானிக்கு இடைக்கால தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்தது.

இதன்படி இந்த மனுமீதான விசாரணை நிறைவடையும் வரையில், தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1000 ரூபாவை வேதனமாக வழங்க வேண்டிய கடப்பாடு பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

அதேநேரம் தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 1000 ரூபாவை வழங்க தீர்மானித்திருப்பதாக, பெருந்தோட்ட நிறுவனங்கள் ஊடக அறிக்கை மூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சந்தைகளில் மோசடியா? உடனேயே அறிவியுங்கள்

கொழும்பு, ஏப். 08

பண்டிகை காலத்தில் சந்தையில் நிலவும் மோசடி செயல்பாடுகள் தொடர்பாக 1977 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் அறிவிக்குமாறு நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

பண்டிகைக் காலப்பகுதியில் சந்தைக்கு வரும் காலாவதியான மற்றும் பயன்பாட்டுக்கு பொருத்தமற்ற பொருட்களை கண்டறிந்து அதற்கெதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைபடுத்தும் நோக்கில் மார்ச் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரை விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அனைத்து அதிகாரிகளையும் ஈடுபடுத்தி நாடு முழுவதிலும் உள்ள மாவட்டங்களில் தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்வதில் அதிகார சபை ஈடுபட்டுள்ளதாக சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

இதற்கமைவாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள முக்கிய மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகளை பரிசோதனை செய்வதற்காக முற்றுகையிடுவதாக அவர் கூறினார்.

காலாவதியான மற்றும் தகவல்களில் மாற்றம் செய்யப்பட்ட பொருட்கள் சந்தைக்கு வருவதை தடுப்பதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சில்லறை வர்த்தக நிலையங்களை முற்றுகையிடுவதற்காக விசாரணை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலப் பகுதியில் நுகர்வோர் பெரும் எண்ணிக்கையில் பொருட் கொள்வனவில் ஈடுபடுகின்றனர். இனிப்பு பண்டங்கள், பலசரக்கு, மின்சார உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் தொடர்பில் சேவை மற்றும் தரம் தொடர்பிலும் இவர்கள் கூடுதலான கவனம் செலுத்தவுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

கையடக்கத் தொலைபேசி விற்பனையார்கள் விசேட கழிவு வழங்கி மேற்கொள்ளும் வர்த்தக செயல்பாடுகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படும். அத்தியாவசிய பொருட்களை பதுக்குதல், பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் ஏற்படுவதைத் தடுத்தல், குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றதா என்பது தொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்தப்படும். பொருட்கள் மற்றும் சேவை விற்பனையில் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தல், கொள்வனவு செய்யப்படும் சகல பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பற்றுச்சீட்டு வழங்குதல் கட்டாயமாகும். இவ்வாறு செய்யாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

சந்தையில் இடம்பெறும் மோசடி தொடர்பில் முறையிடுவதற்கு 1977 என்ற தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலயமும் செயற்படுவதாகவும், அலுவலக நேரங்களில் அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அலுவலக நேரத்திற்கு பின்னர் நுகர்வோரின் தொலைபேசி உரையாடல் பதிவு செய்யப்படுவதுடன் அதற்காக மீண்டும் அதிகாரிகள் தொடர்புகளை ஏற்படுத்தி பிரச்னை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அசேல பண்டார சுட்டிக்காட்டினார்.

# சிறந்த நிர்வாக ஆளுமையை தமிழ்ச் சமூகம் இழந்துள்ளது

## சிவஞானசோதியின் மறைவுக்கு சம்பந்தன் இரங்கல்

கொழும்பு, ஏப். 08

நீண்ட அனுபவமும் நிர்வாக ஆளுமையும் மிக்க பெருமகனார் சிவஞானசோதியை தமிழ் சமூகம் இழந்து நிற்கின்றது. இது ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் பெரும் இழப்பாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வே.சிவஞானசோதியின் மறைவை இட்டு அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான சிவஞானசோதி இலங்கை நிர்வாக சேவையில் நீண்டகால அனுபவம் மிக்கவர். அவர் இந்து கலாசார அமைச்சு, பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, வடக்குச் செயலணி, நல்லிணக்க அமைச்சு ஆகியவற்றில் செயலாளராக பணியாற்றிய காலத்தில் கணிசமான சேவைகளை தன் இனத்திற்குச் செய்திருக்கின்றார்.

மிக முக்கியமாக, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் மிக நெருக்கமாக முறையில் இணைந்து வடக்கு, கிழக்கில் அபிவிருத்திச் செயல்பாடுகள், வேலைவாய்ப்புக்கள், உள்ளிட்ட கணிசமான பல பணிகளை காத்திரமாக முன்னெடுத்துள்ளார்.

அதேநேரம், எதிர்காலத்திலும் அவரது சேவை தமிழ் மக்களுக்கு மிகவும் இன்றியமையாததொன்றாகவே இருந்தது. இதனை பலரும் உணர்ந்திருந்தார்கள். அவரை மக்கள் சேவைக்கு அழைத்து வருவதற்கான சிரமங்களைகள் பலவற்றையும் எமது கட்சியின் உறுப்பினர்களும், புத்திஜீவிகளும் வலியுறுத்தியிருந்தனர்.

சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்த தருணத்தில் அவர் நோய் வாய்ப்பட்டு இயற்கை எய்திவிட்டார். அவரது பிரிவு தமிழ் இனத்திற்கு பெரும் இழப்பாகும்.

நிர்வாக ஆளுமை மிக்க பெருமகனாரை தமிழ் சமூகம் இழந்துவிட்டது. அவரது இழப்பு நிரப்ப முடியாத வெற்றிடமாகும். அவரைப் பிரிந்து நிற்கும் அவரது குடும்பத்தார் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்- என்றுள்ளது.

# திருமலை சிறைச்சாலையில் 16 கைதிகளுக்கு கொரோனா

திருமலை, ஏப். 08

திருகோணமலை பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில், திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலை கைதிகள் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக சிறைக்கைதிகள் ஐவருக்கு, கடந்த வெள்ளிக்கிழமை அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், கடந்த மூன்று தினங்களில் திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை 21ஆக அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பி. பதவியை இழந்தார் ரஞ்சன் புதிய எம்.பி.யாக மன்னப்பெரும!

## சபாநாயகரின் அறிவிப்பையடுத்து சபையில் அமளி

கொழும்பு, ஏப்ரல் 08

**சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்.பி.யான ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.**



பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதனையடுத்து சபாநாயகர் அறிவிப்பை வெளியிட்டபோதே இதனை அறிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மேலும் கூறுகையில்,

சட்ட ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டதன்பின் 1981 ஆம் ஆண்டு முதலாம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 64 சரத்தின் முதலாவது பிரிவின் பிரகாரம் 9ஆவது பாராளுமன்றத்திற்கு கம்பஹா மாவட்டத்திலிருந்து தெரிவான ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதனை இரத்துசெய்வதாக பாராளுமன்ற பொதுச் செயலாளர் தேர்தல் ஆணையத்தின் தலைவருக்கு தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அரசியலமைப்பின் பிரிவு 66 (டி) யின்படி, கம்பஹா தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தவரை பாராளுமன்ற ஆசனத்துக்கான ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்றார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில்ரஞ்சன்ராமநாயக்கவிற்கு 4 வருடங்கள்கடூழியச்சிறைத் தண்டனை விதித்து கடந்த ஜனவரி 12 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் அவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் தனது பாராளுமன்ற ஆசனத்தை இரத்து செய்வதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கக் கோரி ரஞ்சன் ராமநாயக்க சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. எனினும் குறித்த ரீட் மனுவை கடந்த 5ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இந்நிலையிலேயே ஐக்கிய மக்கள்சக்தியின்கம்பஹாமாவட்ட எம்.பி.யான ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று சபையில் அறிவித்தார். இதனையடுத்து பாராளுமன்றத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

வெற்றிடமாகியுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற ஆசனத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலின் அடுத்த இடத்தில் உள்ள அஜித் மன்னப்பெரும நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 47,212 விருப்பு வாக்குகளைப் பெற்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட விருப்பு வாக்குப்பட்டியலில் அஜித் மன்னப்பெரும ஐந்தாவது இடத்தில் உள்ளார். அதற்கமைய, ரஞ்சன் ராமநாயக்கவின் வெற்றிடத்துக்கு அஜித் மன்னப்பெரும நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ரஞ்சன் ராமநாயக்க விடயத்தில் மனிதத்தன்மையுடன் நடவுங்கள்

## சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 08



ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் விவகாரம் தொடர்பாக சபாநாயகர் மனிதத் தன்மையுடன் செயற்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுள்ளார்.

நீதிமன்றத்தை அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 4 வருடம் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன்ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாக உள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று அறிவித்தார்.

இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கருத்து தெரிவித்தார், “பாராளுமன்ற சட்டத்தின் 66 டி சரத்துக்கு இணங்க, ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாது செய்யப்படுவதாக தெரிவித்துள்ளீர்கள்.

நீங்கள் இந்த தீர்மானத்தை, ரஞ்சன் ராமநாயக்க மூன்று மாதங்களுக்கும் மேல் பாராளுமன்றுக்கு வருகைத் தராத காரணத்தினால் தான் எடுத்ததாக கூறியுள்ளீர்கள்.

நான் மார்ச் 9 ஆம் திகதியன்று சபையில் வைத்து, ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றுக்கு வருகை தராதிருப்பதற்கான அனுமதியைக் கோரியிருந்தேன்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் இது தொடர்பாக எமக்கு அனுப்பியுள்ள எழுத்து மூலமான கடிதத்தில், இதற்கான அனுமதியை வழங்க முடியாது என்றும் நீதிமன்றத்தை அவமதித்தமையால் பாராளுமன்றுக்கு அவரை அனுமதிக்க முடியாது என்றும் கூறப்பட்டிருந்தது.

அதாவது, அவர் பாராளுமன்றுக்கு வருகை தராமல் இருந்து மூன்று மாதங்கள் முடிவடைய, இரண்டு வாரங்களுக்கு முன்னரே நாம் இதற்கான அனுமதியை கோரியிருந்தோம்.

இதற்கு நீங்கள், நீதிமன்றில் இந்த விவகாரம் உள்ளமையால் இதுவிடயம் தொடர்பாக தீர்மானிக்க முடியாது என்று கூறினீர்கள். இந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமையன்று அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

எனினும், இதற்கெதிராக உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யக்கூடிய சூழல் இருக்கும் நிலையில், தற்போது நீங்கள் அவரின் உறுப்புரிமை இரத்தாவதாக அறிவித்துள்ளீர்கள்.

அவர் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்து, இதற்கொரு முடிவு வரும்வரை அவருக்கான வாய்பொன்றை வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இதனை மனிதத் தன்மையுடன் நோக்கவேண்டும்-என்றார்.



# கிளிநொச்சி வலய கல்விபணிமனைக்கு முன்பாக நேற்று பகல் பெரும் விபத்து!

கிளிநொச்சி, ஏப். 08

கிளிநொச்சி வலய கல்விபணிமனைக்கு முன்பாக ஏ-9 வீதியில் பயணித்த கார் மற்றும் ரிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியது.

நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கி ஒரே திசையில் பயணித்த இரு வாகனங்களே விபத்துக்குள்ளாகியுள்ளன.

வீதியில் பயணித்த கார் வீதியை குறுக்கிட்டு கடக்க முற்பட்டுள்ளது. காரின் பின்னால் பயணித்த மற்றுமொரு ரிப்பர் வாகனத்தை முந்தி சென்ற ரிப்பர் வாகனம் கார் வீதியை கடக்க முற்படுவதை அவதானிக்காமல் முந்தி செல்ல முற்றப்பட்டபோது காருடன் மோதியுள்ளது.

இதன்போது கார் கடும் சேதமடைந்தது. விபத்துக்குள்ளான கார் வீதி ஓரத்தில் இருந்த வாகன ரயருடன் மோதி நின்றுள்ளது. குறித்த ரயர் இல்லாத சந்தர்ப்பத்தில் மரத்துடன் மோதி பெரும் விபத்தில் சிக்கியிருக்கும் எனக் கூறப்பட்டது.

இந்த விபத்தில் வாகனங்கள் பெரும் சேதமடைந்துள்ளதுடன், எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் தெய்வாதீனமாக ஏற்பட்டிருக்கவில்லை.

# யாழ்ப்பாண மாநகர சபையின் காவல் படை உருவாகியது!

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ்.மாநகர காவல் படை முதல் தடவையாக நேற்றுக் காலை தமது பணியை ஆரம்பித்துள்ளது.

யாழ்.மாநகரில் சுகாதார நடைமுறைகளை கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறையை கண்காணித்தல் மற்றும் மாநகரின் ஒழுங்கு உள்ளிட்டவற்றை கண்காணிப்பது, தண்டப் பணத்தை அறவிடுவதற்காக குறித்த மாநகர பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த மாநகர பாதுகாப்புப் படை இன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ள நிலையில் நேற்று காலை பரீட்சார்த்தமாக நல்லூர் சுற்றாடலில் வாகன ஒயில் ஊற்றப்பட்ட நிலையில் விபத்துக்களைத் தவிர்க்க முன்னாயத்த நடவடிக்கைகளை கண்காணித்தது.

யாழ். மாநகர சுகாதார பணிமனைகளில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் 5 பேரை, புதிய சீருடையொன்றை அறிமுகம் செய்து, மாநகர காவல் படையென்ற பெயரில் யாழ் மாநகரசபை உருவாக்கியுள்ளது.

# மார்ச்சில் கஜகஸ்தானிலிருந்தே அதிகளவு சுற்றுலாப்பயணிகள்!

கொழும்பு, ஏப். 08

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளில் கஜகஸ்தானை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே அதிகமானவர்கள் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் இலங்கைக்கு 4581 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இவர்களில் 1,514 பேர் கஜகஸ்தானை சேர்ந்தவர்கள்.

2021 மார்ச் 31 ஆம் திகதி நிலவரப்படி, இந்த ஆண்டு மொத்தம் 9,629 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

# மத்தள விமான நிலையம் ஊடாக 445 மில்லியன் ரூபா வருமானம்

கொழும்பு, ஏப். 08

மத்தள சர்வதேச விமான நிலையம் கடந்த நவம்பர் மாதம் திறக்கப்பட்டதில் இருந்து இதுவரை 445 மில்லியன் ரூபா சம்பாதித்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷ விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், விமான நிலையத்திற்கு செலவிடப்பட்ட தொகை 247.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என கூறினார்.

மேலும் மத்தள சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டதில் இருந்து இதுவரை 10,206 விமானங்கள் தரையிறங்கியுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

2013 இல் திறக்கப்பட்ட குறித்த விமான நிலையத்தில் 2020 நவம்பர் வரை 58,651 பேர் வருகைதந்துள்ளனர் என்றும் 73,513 பேர் பயணங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# ஷானி அபேசேகரவின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஏப். 08

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் உள்ளிட்ட 3 பேரின் விளக்கமறியலும், இம்மாதம் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டள்ளது.

கம்பஹா பிரதான நீதிவான் மஞ்சுள கருணாரத்ன இந்த உத்தரவை பிறப்பித்தார்.

சி.ஐ.டியின் முன்னாள் இயக்குநரும், முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலைய முன்னாள் சப் இன்ஸ்பெக்டர் மோகன மெண்டிஸ் மற்றும் ஓய்வு பெற்ற சப் இன்ஸ்பெக்டர் நவரத்ன பிரேமதிலக ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு காலங்களில்

# சுகாதார வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்றுங்கள்!

## மக்களுக்கு முன்எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.08

**தமிழ், சிங்கள புத்தாண்டு காலங்களில் சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

ஆரோக்கியமான மற்றும் அமைதியான புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக மக்கள் எல்லா நேரங்களிலும் வழிகாட்டுதல்களையும் அனைத்து தனிமைப்படுத்தப்பட்ட விதி முறைகளையும் கடைபிடிக்க வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொது இடங்களில் எல்லா நேரங்களிலும் முகமூடி அணியுமாறும் சமூக தூரத்தை பராமரிக்குமாறும் அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

இதேநேரம், பண்டிகை காலங்களில் அதிக எண்ணிக்கையிலான விபத்துக்கள் பதிவாகின்றன என்பதால், வீதி விபத்துக்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு அஜித் ரோஹண கேட்டுக்கொண்டனர்.

இந்த காலகட்டத்தில் வீதி விபத்தில் உயிரிழக்காமல் இருக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பொலிஸ் பேச்சாளர் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.



# தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு வீடுகளுக்கு அத்திவாரம் நாட்டிவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 08

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டஜே-182 கிராம சேவையாளர் பிரிவில் புத்தசாசன அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இராணுவத்தினரால் அமைக்கப்படவுள்ள வீட்டுக்கான அடிக்கல் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி தே ஜெனரல் பிரியந்த பெரேராவினால் நாட்டி வைக்கப் பட்டது

புத்தசாசன அமைச்சின் 6 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபை, இராணுவத்தினரால் கட்டி கொடுக்கப்படவுள்ள குறித்த வீடுகளுக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது

நயினாதீவில் இரண்டு வீடுகளும் தெல்லிப்பழை மற்றும் உடுவிலில் தலா ஒவ்வொரு வீடுமாக யாழ்.மாவட்டத்தில் நான்கு வீடுகள் தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு வறிய குடும்பங்களுக்கு கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் 24 ஆம் திகதி குறித்த வீட்டின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீட்டுக்கு அடிக்கல் நாட்டிய பின் ஊடகங்களுக்கு கருத்துரைத்த யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி-

தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு புத்தசாசன அமைச்சின் செயலாளரின் ஏற்பாட்டில் அவரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மூன்று குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. ஏற்கெனவே யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரால் 744 வீடுகள் வறிய மக்களுக்கு கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல மேலும் 10 வீடுகள் வீடுகள் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

அத்தோடு இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தலைமையகத்தினரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறுபட்ட சமூக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கரநாற்காலிகள் அதேபோல் கர்ப்பிணித் தாய்மாருக்கு உலர் உணவு பொதிகள் என்பன இராணுவத்தினரால் வழங்கப்படுகின்றன-என்றார்.

### சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் ஏப்ரல் 13 மலேசியாவுக்கு மீள் ஏற்றுமதி

புற்றுநோயை ஏற்படுத்தும் திரவம் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ள தேங்காய் எண்ணெயின் ஆறு கொள்கலன்களும் 13 ஆம் திகதி மலேசியாவுக்கு அனுப்பப்படும் என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மீள் ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் மதிப்பு 377 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

105 மெற்றிக் தொன் எடையுள்ள தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதிக்காக கொழும்பு துறைமுகப் புறப்பாடு முனையத்திற்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் கொண்டு செல்லப்பட்டது.

தனியார் நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் கொள்கலன்களில் எப்லடொக்சின் என்ற புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்கு ஜனாதிபதி கோட்டாபய தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கலப்பு முறையிலேயே மாகாணசபைத் தேர்தல்!

## தனி வழிக்கு தயாராகும் மலையக கட்சிகள்

கொழும்பு, ஏப். 08

இவ்வருடத்துக்குள் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. குறிப்பாக தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியாக தடையாக உள்ள விடயங்களை தகர்ப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

மறுபுறத்தில் மாகாணசபைத் தேர்தலுக்கு முக்கியமான பௌத்த தேரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அரசுக்கு ஆதரவு வழங்கும் கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால் மாகாணசபைத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி தொகுதி (70 வீதம்) மற்றும் விகிதாசாரம் (30 வீதம்) என கலப்பு முறையில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளது. இதுவரை மாகாணமொன்றில் கூடுதல் வாக்குகளைப்பெறும் கட்சிக்கு 2 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும். புதிய யோசனையின் பிரகாரம் மாவட்டமொன்றுக்கு இரு ஆசனங்கள் வழங்கப்படவுள்ளன. மேல் மாகாணத்தில் மூன்று மாவட்டங்கள் உள்ளன. அப்படியானால் 6 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு தேர்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதால் அரசியல் கட்சிகளும் அது தொடர்பில் கழுகுப்பார்வையை செலுத்தி பூர்வாங்க பணிகளை முன்னெடுத்து வருகின்றன. தற்போதைய நிலைவரப்படி மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவதற்கு முக்கியமான சில கட்சிகள் ஆலோசனை நடத்தி வருகின்றன.

தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட மேலும் சில கட்சிகளே தனிவழிப்பயணத்துக்கு தயாராகிவருகின்றன. எனினும், இறுதிப்படுத்தப்பட்ட தேர்தல் முறைமை எவ்வாறு அமையும் என்பதை அடிப்படையாகக்கொண்டே மேற்படி கட்சிகளின் இறுதி முடிவு அமையும்.

புதிய தேர்தல் முறையானது சிறு கட்சிகளுக்கு பாதிப்பாக இருக்கக்கூடும் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# யாழ்.மாநகர மத்தியில் கடைகளை கட்டுப்பாட்டுடன் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ். மாநகர மத்தியில் உள்ள கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களில் கொவிட்-19 நோய்த் தோற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்ட கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளை இன்று வியாழக்கிழமை தொடக்கம் திறக்க அனுமதிப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன் விடுத்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி முதல் யாழ். மாநகர மத்தியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 14 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட இரண்டு பி.சி.ஆர் பரிசோதனைகளில் தொற்று இனங்காணப்பட்டோரின் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளை இன்று காலை முதல் திறப்பதற்கு அனுமதிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலாளர் க. மகேசன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் அவசரமாக கூடிய யாழ். மாவட்ட உயர்மட்ட செயலணியில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வர்த்தகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று உறுதி செய்யப்பட்டோர் தவிர்ந்த ஏனையோரின் கடைகளை இன்று முதல் திறப்பதற்கு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

மேலும் தற்போது பண்டிகைக் காலம் என்பதால் மக்கள் வழமை போன்று ஒன்றுகூடல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதிகளில் வீதித் தடைகளை ஏற்படுத்தி பொதுமக்களை ஒன்று கூடாத வண்ணம் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டதில் அபாய நிலை இன்னும் நீங்கவில்லை. எனவே தற்போதைய நிலையில் பொது மக்கள் ஒன்று கூடலை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும்-என்றார்.

# ஒரு இலட்சம் ரஷ்யத் தடுப்பூசிகள் 12ஆம் திகதி நாட்டுக்கு கிடைக்கும்

கொழும்பு, ஏப். 08

ஸ்புட்னிக் ஏ தடுப்பூசிகளில் ஒரு இலட்சம் தடுப்பூசிகள் எதிர்வரும் 12ஆம் திகதி நாட்டுக்கு கிடைக்கவுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடம் முற்பதிவு செய்யப்பட்ட 7 இலட்சம் தடுப்பூசிகளின் முதற் தொகுதியே இவ்வாறு கிடைக்கவுள்ளதாக அந்தக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தினுஷ தசநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஏனையவற்றை மாதாந்தம் நாட்டுக்கு வழங்குவதற்கு அந்த நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது. இவற்றில் முதலாம் மற்றும் இரண்டாம் தடுப்பூசிகளே எதிர்வரும் 12ஆம் திகதி கிடைக்கவுள்ளன.

இதேவேளை, ஏற்கனவே முற்பதிவு செய்யப்பட்டுள்ள 10 இலட்சம் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிகளை நாட்டுக்கு வழங்கும் திகதி குறித்து இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவுக்கு பின்னரான உலக ஒழுங்கும் தமிழர்கள் முன்னுள்ள உபாயங்களும்



கணநாதன்

உலகை உலுக்கிய **1923** முதல் **1939** வரை நீடித்த பெரும் பொருளாதார சீர்குலைவு (Great depression) மற்றும் உலகப் போருக்குப் பின்னர் நிகழ்ந்த சர்வதேச அரசியலில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்திய ஓர் உலகளாவிய நிகழ்வாக COVID – 19 தொற்று நோய் கருதப்படுகிறது.

குறைந்தது **4.8** மில்லியன் மக்கள் ஆறு மாதங்களுக்குள் பாதிக்கப்பட்டுள்ளனர். **300,000** இற்கும் அதிகமானோர் இறந்துவிட்டனர், மேலும் பயனுள்ள தடுப்பூசிகள் அல்லது சிகிச்சைகள் இறுதியில் உருவாக்கப்பட்டாலும், இன்னும் பல இறப்புகள் தொடர்ந்துகொண்டுள்ளன. உலக பொருளாதாரம் நெருக்கடிகளை சந்தித்து மந்தநிலையில் உள்ளது. கடன் அளவு உயர்ந்து வருகிறது, எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகள் குறைவடையத் தொடங்கியுள்ளன. இது சில வழிகளில் மனித வரலாற்றில் முதன் முறையாக ஓர் முழுமையான உலகளாவிய நெருக்கடியாக அமைந்துள்ளது.

நீண்ட ஆழமான விளைவுகள் இருந்த போதிலும், தற்போதைய தொற்றுநோய் உலக அரசியலின் அடிப்படைத் தன்மைகளை மாற்றப் போவதில்லை. அதாவது பிராந்திய அரசுகளே தொடர்ந்தும் சர்வதேச விவகாரங்களில் முக்கியமாகவிருக்கும் அதேவேளை தேசியவாதம் ஒரு சக்தி வாய்ந்ததாக மாற்றம் பெற்றுள்ளது. ஆனால் COVID – 19 முன்னர் நடந்து கொண்டிருந்த பிளவுப் போக்குகளை வலுப்படுத்த அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, இது உலகமயமாக்கலில் இருந்து பின்வாங்குவதை வேகப்படுத்தியுள்ளதுடன், சர்வதேச வர்த்தகம், முதலீடு மற்றும் பயணங்கள் ஆகியவற்றுக்குப் புதிய தடைகளை ஏற்படுத்தியுள்ளன. மேலும் ஜனநாயக மற்றும் ஜனநாயகமற்ற அரசாங்கங்களுக்கு அவர்களின் குடிமக்களின் வாழ்க்கையில் தமது அதிகாரங்களை மிகையாகப் பிரயோகிக்கும் சூழலையும் ஏற்படுத்தியுள்ளது.

சுருக்கமாக கூறுவதானால் COVID – 19 இற்குப் பிந்தைய உலகம் தாராளவாதத் தன்மை குறைந்த, அரசுக்ளுக்கிடையிலும் பிராந்திய சக்திகளுக்கிடையிலும் நெருக்கடியையும் போட்டித் தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

பனிப்போருக்குப் பின்னாக தமது பொருளாதார அரசியல் நலன்களின் அடிப்படையில் உலகளாவிய தாராளமய ஒழுங்கை உருவாக்குவதற்காக, ஜனநாயகம், திறந்த சந்தைகள், சட்ட ஆட்சி மற்றும் பிற தாராளவாத விழுமியங்களைப் பரப்புவதற்கான ஒரு தொடர்ச்சியான முயற்சியை அமெரிக்கா வழிநடத்தியது. அமெரிக்கத் தலைவர்கள். இத்தாராளவாதமானது சீனா மற்றும் பிற ஜனநாயகமற்ற நாடுகளை மேலும் தாராளமய ஜனநாயகத்தின் பக்கம் செல்வதற்கு ஊக்குவிக்கும் என மேற்குலகமும் அமெரிக்காவும் நம்பினர். இந்த பார்வை **1994** இல் உலக வர்த்தக அமைப்பை உருவாக ஊக்கமளித்ததுடன் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், நேட்டோ விரிவாக்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையிலான பிற பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் நிதி விதிமுறைகளை குறைப்பதற்கும் வெளிநாடுகளில் முதலீட்டை எளிதாக்குவதற்கும் பல முயற்சிகளை மேற்கொண்டன. இதன் தொடர்ச்சியாகவே ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவாக்கத்தையும் **1999** இல் யூரோவையும் பார்க்க முடியும். இந்த புதிய உலகமயமாக்கப்பட்டு உலகில், பெரும் அதிகார வலுப் போட்டிகள் மற்றும் பழைய கடந்த கால வெறுப்புகள் வரலாற்றின் குப்பைத் தொட்டியுள் எறியப்பட்டு விட்டதாகவும் உலகெங்கிலும் உள்ள மக்கள் தமது செல்வத்தைப் பெருக்குவதிலேயே கவனம் செலுத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் எதிர்பார்த்ததற்கு மாறாக உலகமயமாக்கலின் குறைகள் ஏற்றத்தாழ்வுகள் கொரோனா வைரஸ் தோன்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அதி உச்ச உலகமயமாக்கலுக்கு எதிரான ஒரு பின்னடைவு நடந்து கொண்டிருந்தது. **2008** நிதி நெருக்கடி அதிக நிதி ஒருங்கிணைப்பின் அபாயங்களை காட்டியதுடன் வளர்ந்த நாடுகளில் சமத்துவமின்மை தொடர்ந்து அதிகரித்து வந்தது. சிலவற்றில் தொடர்ச்சியான வேலை இழப்புகள் மற்றும் சமூக பொருளாதார சமத்துவமின்மை போன்றவற்றால் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் கீழ் மற்றும் நடுத்தர வர்க்கங்கள் அதிக நன்மைகளை நீண்டகாலப் போக்கில் பெறவில்லை. இந் நிகழ்வுகள் சனத் திரள் தேசியவாத அலைகளை பல நாடுகளில் தூண்டி உதவியதுடன் **2016** இல் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறிய பிரிட்டனின் முடிவு மற்றும் அமெரிக்காவில் டொனால்ட் டிரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்தது. டிரம்ப் பதினொரு நாடுகளுடன் ஒபாமா அரசால் மேற்கொள்ளப்பட்டு வர்த்தக கூட்டான டிரான்ஸ்-பசிபிக் உடன்படிக்கையை விட்டு தனது மூன்றாம் நாளில் வெளியேறினார்.

COVID – 19 இற்கு முன்பே உருவாகிவிட்ட தேசியவாதம் மீளவும் எழுச்சியுற்றதுடன் வளர்ந்து வரும் பெரும் அதிகாரப் போட்டியும் உலகமயமாக்கத்தை மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான அதிகரித்துவரும் போட்டியில் இந்த போக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்தது. மேலும் இது ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறுவதற்கான பிரிட்டனின் முடிவும் ரஷ்யாவிற்கும் மேற்கிற்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்து வருகின்றமையும் இன்றுள்ள தாராளவாதப் போக்குக்கு எதிரான அலைகளாகப் பார்க்க முடியும். தாராளமய ஒழுங்கின் அங்கமான அரசுகளுக்கிடையிலான உறவுகளை வழிநடத்தும் விதிகள், விதிமுறைகள் மற்றும் அவர்களால் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் (western institutions) பரவலாக நெருக்கடிகளை சந்தித்துள்ளன. தற்போது முக்கிய சர்வதேச சக்திகளிடையேயான போட்டிகளால் அதிகார சமநிலை மாற்றம் பெற்று இத்தாராளவாத ஒழுங்கினை கேள்விக்குட்படுத்தியுள்ளன.

COVID – 19 இற்கு பிந்தைய உலக ஒழுங்கினை வரையறுக்கும் விடயம் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே ஒரு கடுமையான போட்டியாக இருக்கும். சர்வதேச அமைப்பில் மிகவும் சக்திவாய்ந்த இரண்டு சக்திகளாக அமெரிக்காவின் தாராளமய ஜனநாயகத்திற்கும் சீனாவின் ஒரு கட்சி அரசிற்கும் இடையிலான வெளிப்படையான வேறுபாடுகள் இரு நாடுகளிலும் மத்தியில் சந்தேகங்களை அதிகரித்துள்ளன. மேலும், அவர்களின் பரந்த மூலோபாய நோக்கங்களும் முரண்படுகின்றன. யூரேசியாவில் (Eurasia) அதிகார சமநிலையைப் பாதுகாப்பதற்கான அதன் நீண்டகால உறுதிப்பாட்டுக்கு இணங்க, அமெரிக்கா ஆசியாவில் சீனா ஒரு ‘பிராந்திய மேலாதிக்கமாக’ மாறாமல் பார்த்துக் கொள்ள முயற்சிக்கும் சீனாவின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் எதிர்கொள்வதற்கு அமெரிக்கா ஏனைய பகுதிகளுக்கு குறிப்பாக மேற்கு அரைக்கோளத்தில் ஜப்பான், இந்தியா, தென் கொரியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா மற்றும் பல ஆசிய சக்திகளுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளைப் பேண முயற்சிக்கின்றது.

இதன் விளைவாக சீன அமெரிக்கப் போட்டியானது வலு, செல்வாக்கு மற்றும் பாதுகாப்பிற்கான தீவிரமான போட்டியாக இருக்கும், இது உலகளாவிய ஒத்துழைப்பின் (global cooperation) நோக்கத்திலும் நடைமுறையிலும் குறிப்பிடத்தக்க வரையறைகளை ஏற்படுத்தியுள்ளன. இது மேலும் பிராந்திய மற்றும் அல்லது கருத்தியல் வழிகளில் பிரிக்கப்பட்ட உலகளாவிய ஒழுங்கிற்கு வழிவகுக்கிறது.

இவ்வாறானதோர் சூழலில், ஐரோப்பா அதன் தொடர்ச்சியாக அதன் உள் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மெதுவான பொருளாதார வளர்ச்சி, விரைவாக வயதான மற்றும் சுருங்கி வரும் மக்கள் தொகை, ஜனநாயகத்திற்கான அர்ப்பணிப்பு கேள்விக்குரிய தீவிர வலதுசாரி இயக்கங்களின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கு இதற்கு சிறந்த உதாரணங்களாக அமந்துள்ளன. “பொதுவான வெளிநாட்டு மற்றும் பாதுகாப்பு” கொள்கையின் சாத்தியமான வளர்ச்சியைத் தவிர்த்து, ஐரோப்பிய ஒன்றியம் உலக விவகாரங்களில் அதன்செல்வாக்கு குறைந்து வருவதால் எதிர்காலத்தில் அதன் தாக்கம் குறைந்து செல்வதற்கான சாத்தியங்களே உள்ளன.

ஆனால் சீன-அமெரிக்க போட்டி தீவிரமடைந்தால், ஐரோப்பிய நாடுகள் ஒரு மோசமான தேர்வை எதிர்கொள்ளும். அதாவது, பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் இரு முக்கிய சக்திகளுக்கு இடையிலான புவிசார் அரசியல் போட்டியில் நடுநிலை வகிக்கவோ அல்லது இரு நாடுகளுடனும் நெருக்கமான பொருளாதார உறவுகளைப் பேணும் நிலைக்கோ தள்ளப்படும். எனினும் ஐரோப்பாவால் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான போட்டியில் நடுநிலை வகிக்க முடியாது. மேலும் அமெரிக்க பாதுகாப்பை தொடர்ந்து நம்பியிருக்கவும் முடியாது. சீன-அமெரிக்க போட்டியின் ஓரத்தில் ஐரோப்பா இருக்க முயற்சித்தால், அது நேட்டோவின் வீழ்ச்சியை நோக்கி இட்டுச்செல்லும். மேலும் ஐரோப்பிய நாடுகள் தங்கள் சொந்த பாதுகாப்புக்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டிய கட்டாயத்திலும் இன்று உள்ளன.

இவ்வாறானதோர் பூகோளப் போட்டி நிலையில் ஐரோப்பா சர்வதேச விவகாரங்களில் தனது வலுவினை இழந்துகொண்டு இருக்கும் பின்னணியிலும் சீன அமெரிக்க அதிகார வலுப் போட்டியை மையமாகக் கொண்டு இந்தோ பசுபிக் சமுத்திரத்தின் பூகோள அரசியல் நிலமைகள் தீவிரமடைந்துள்ள இந்நிலமையிலும் இலங்கைத் தீவானது இப்பூகோள அரசியற் போட்டியின் தாக்கங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

வலுவிழந்து செல்லும் மேற்குலக அரசியற் பலம் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள தாராளவாத மேற்குலக ஒழுங்கு கேள்விக்குள்ளாகியிருக்கும் இவ்வேளையில் தமழ் மக்கள் முழுமையாக தமது அரசியற் செயற்பாடுகளை மேற்குலகையும் வலுவற்ற ஐக்கிய நாடுகளையும் மையப்படுத்தி மேற்கொள்வதானது ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியதொன்றாக அமைந்துள்ளது.

இதேவேளை வலுச்சமநிலை ஆசியாவை நோக்கிய நகர்ந்திருக்கும் இவ்வேளை தமிழ் மக்களின் செயற்பாடுகளும் இவ்வுலக மாற்றங்களை கருத்திற்கொண்டு தமது எதிர்காலச் செயற்பாடுகளை ஆசியாவை மையப்படுத்தியதாகவும் அதேவேளை மேற்குலகுடனும் சரியான அணுகுமுறையுடனும் கொண்டுசெல்ல வேண்டிய தருணத்தில் உள்ளார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடப்பாடி Vs ஸ்டாலின்: விறுவிறுப்புடன் முடிந்த வாக்குப்பதிவு – கோட்டையை பிடிப்பது யார்?



தமிழக சட்டப்பேரவையில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளுக்கான தேர்தல் கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவு பெற்றது. இதில் சுமார் 71.43 சதவீத வாக்குகள் பதிவானதாக தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

முழு தரவுகளும் வந்தபிறகு இந்த சதவீதக் கணக்கு உயரக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த தேர்தலில் அதிமுக சார்பில் கே. பழனிசாமி, திமுக சார்பில் மு.க. ஸ்டாலின், அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் டி.டி.வி. தினகரன், நாம் தமிழர் கட்சி சார்பில் சீமான், மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் கமல்ஹாசன் ஆகியோர் முதலமைச்சர் வேட்பாளராக தங்களை அழைத்துக் கொண்டு தேர்தல் களம் கண்டனர்.

ஒரே கட்டமாக நடந்த வாக்குப்பதிவில், பரவலாக மாநிலத்தின் எல்லா தொகுதிகளிலும் அதிக வன்முறையின்றி வாக்குப் பதிவு அமைதியாக நடந்தது. ஒரு சில இடங்களில் வன்முறை சம்பவங்கள் தலை தூக்கினாலும், அவை காவல்துறை உதவியுடன் தடுக்கப்பட்டன.

### ஜெயலலிதா மறைவுக்கு பிந்தைய மாற்றம்

தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது தனது பதவிக்காலத்திலேயே உயிரிழந்தார். இதனால், அவர் விட்டுச் சென்ற பதவிக்காலத்தின் மீதமுள்ள நான்கரை ஆண்டுகளை நிறைவு செய்ய தொடக்கத்தில் ஓ.பன்னீர்செல்வம் சில மாதங்களும் அதன் பிறகு எடப்பாடி பழனிசாமியும் ஆட்சிக்காலத்தை நிறைவு செய்தனர்.

ஜெயலலிதா 2016 டிசம்பரில் மறைந்த பிறகு தொடக்கத்தில் சில மாதங்கள் முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் இருந்த நிலையில், அடுத்த முதல்வராக சசிகலா நடராஜன் பதவியேற்க ஆயத்தமான வேளையில், சொத்து குவிப்பு வழக்கில் அவருக்கு உச்ச நீதிமன்றம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதனால், அடுத்த முதல்வராக எடப்பாடி பழனிசாமியை சசிகலா கைகாட்டிய வேளையில், அதிருப்தியில் தனித்து செயல்பட்ட ஓ.பன்னீர்செல்வம் சில மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் எடப்பாடி பழனிசாமியுடன் கைகோர்த்தார். அப்போது அவருக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்பட்டது.

இந்த இருவர் கூட்டணி, 2019ஆம் ஆண்டில் நடந்த மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியுடன் அதிமுக கூட்டணி சேர காரணமாகியது. அதே கூட்டணி தற்போதைய சட்டப்பேரவை தேர்தலிலும் தொடர்கிறது. ஆனால், 2019 மக்களவை தேர்தலில் மொத்தம் உள்ள 39 தொகுதிகளில் 38 இடங்களில் திமுக கூட்டணி வென்றது. அதிமுக அணியில் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் குமார் தேனி தொகுதியில் இருந்து மக்களவைக்கு தேர்வானார்.

2011ஆம் ஆண்டிலும் 2016ஆம் ஆண்டிலும் தொடர் முதல்வராக இருந்த ஜெயலலிதா, கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத வகையில் முதல் முறையாக தொடர்ந்து தமிழக முதல்வர் பதவியில் நீடித்தார். அதுவரை மாநிலத்தில் ஒவ்வொரு முறை தேர்தல் நடக்கும்போதும் திமுக அல்லது அதிமுக மட்டுமே மாறி, மாறி ஆட்சிக்கு வந்து கொண்டிருந்தன.

### ஐந்து முனை போட்டி

இந்த நிலையில், தற்போது நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான கூட்டணி, இடைவிடாது தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டது. இந்த தேர்தலில் ஸ்டாலின் தன்னை இரு முறை சட்டப்பேரவைக்கு அனுப்பி வைத்த கொளத் தூர் தொகுதியில் களம் கண் டார். வாரிசு அரசியல் திமுக வில் ஊக்குவிக்கப்படாது என்று கூறி வந்த ஸ்டாலின், இந்த தேர்தலில் திமுக இளைஞர் அணி தலைவரான தனது மகன் உதய நிதியை திருவல்லிக்கேணி-சேப்பாகம் தொகுதியில் போட்டி யிட வாய்ப்பளித்தார். திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 25 இடங்கள் தரப்பட்டன.

மறுபுறம் அதிமுக கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சிக்கு 20 இடங்கள் ஒதுக் கப்பட்டன. மற்றொரு கூட்டணி கட்சியான பாட்டாளி மக்கள் கட்சிக்கு 23 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

இதேவேளை மக்கள் நீதி மய்யம் கட்சி 234 தொகுதிகளில் தனது கட்சியினரையும் கூட்டணி கட்சியினரையும் களமிறக்கியது. ஏற்கெனவே மக்களவை தேர்தலில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு தேர்தல் புதிதல்ல என்றாலும், மக்களவையை விட மாநில சட்டப்பேரவையில் போட்டியிடுவது இடங்கள் மற்றும் பரப்புரை அடிப்படையில் மிகவும் பெரியது என்ற அனுபவத்தை அக்கட்சிக்கு கொடுத்திருக்கும் என்றே தோன்றுகிறது.

நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை



களமிறக்கி தேர்தல் களம் கண்டார். தொடக்கத்தில் கொளத்தூர் தொகுதியில் ஸ்டாலினுக்கு எதிராக களம் காண்பதாகக் கூறிய அவர், பிறகு திருவொற்றியூர் தொகுதியில் நின்று தேர்தலை சந்தித்தார்.

### ஆதரவை தவிர்த்த சசிகலா

அமமுக கட்சி, சசிகலா ஆதரவுடன் தேர்தல் களம் கண்டாலும், இந்த தேர்தலில் தனது ஆதரவு யாருக்கும் இல்லை என்று அறிவித்த சசிகலா, அம்மாவின் ஆட்சி தமிழகத்தில் தொடர வேண்டும் என்று கூறினார். ஆனால், கடைசிவரை அவர் நேரடியாக எடப்பாடி பழனிசாமி, பன்னீர் செல்வம் வழிநடத்தும் அதிமுகவையோ, டி.டி.வி. தினகரன் வழிநடத்தும் அமமுகவையோ ஆதரிக்கவில்லை.

இந்த தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் வாக்காளர்களை கவர பல்வேறு செயல் திட்டங்களையும் தொகுதிவாரியாக தேர்தல் வாக்குறுதிகளையும் அறிவித்தாலும், பரப்புரைகளின்போது ஒவ்வொரு கட்சியும் தங்களின் சாதனைகளை பட்டியலிடுவதை விட, பரஸ்பரம் தனி நபர் குற்றச்சாட்டுகளை மையப்படுத்துவதிலேயே ஆர்வம் காட்டின.

செவ்வாய்க்கிழமை நடந்த தேர்தலின் போது, தேர்தல் விதிகளை மீறிச் செயல்பட்டதாக திமுகவும், அதிமுகவும் பரஸ்பரம் தேர்தல் அதிகாரியிடம் புகார் மனுக்களை அளித்தன. தேர்தல் நடத்தை விதிகளை திமுக தலைவரின் மகன் உதயநிதி ஸ்டாலின் மீறி விட்டதாதக் கூறி அதிமுக சார்பில் புகார் மனு அளிக்கப்பட்டது. அவர் வாக்குரிமை செலுத்திய பிறகு தமது கட்சியின் தேர்தல் சின்னத்தை காண்பித்ததாக அதிமுக கூட்டணி குற்றம்சாட்டியது.

மறுபுறம் தமது சொந்த தொகுதியான தேனியில் தான் சென்ற வாகனத்தை சில திமுகவினர் தாக்கியதாக ரவீந்திரநாத் குற்றம்சாட்டினார். மேலும், நடந்த தாக்குதலில் அவரது காரின் முன்பக்க, பின்பக்க கண்ணாடிகளில், கற்கள் வீசப்பட்டதில் ஓட்டை விழுந்திருந்தது.

இதேபோல, திமுக வேட்பாளரான கார்த்திகேய சிவசேனாபதி, தொண்டாமுத்தூர் தொகுதியில் தன்னை அதிமுகவினரும், பாஜகவினரும் தாக்க முற்பட்டதாக குற்றம்சாட்டினார். சேலத்தில் பாமகவின் தேர்தல் சின்ன மான மாம்பழம் பொறித்த டீ-ஷர்ட் அணிந்த நபருக்கு அங்கிருந்த வாக்குச் சாவடியில் இருந்தவர் ஆட்சேபம் தெரிவித்த தால் வாக்குவாதம் ஏற்பட்டது.

### பிரபலமான 49பி விதி

சென்னையில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் இரண்டு வாக்காளர்கள், தங்களுடைய வாக்கை வேறு யாரோ பதிவிட்டதாக புகார் கூறினர். தேர்தல் விதி 49பி-இன்படி வாக்குச்சீட்டு முறையில் தங்களுடைய வாக்குரிமையை செலுத்த அவர்கள் உரிமை கோரினர்.

இத்தகைய விதியின் சிறப்பம்சத்தை மையமாக வைத்து நடிகர் விஜய் 2018ஆம் ஆண்டில் சர்கார் என்ற படத்தில் நடித்திருப்பார். அதன் பிறகு இந்த தேர்தல் விதி தொடர்பான விழிப்புணர்வு தமிழ்நாட்டில் அதிகமாக இருப்பதற்கு உதாரணமாக இந்த நிகழ்வு பார்க்கப்படுகிறது.

அசாதாரணமான முறையில் ராமநாதபுரத்தின் கோடங்கிப்பட்டியில் அடிப்படை வசதிகள் இல்லாததை கண்டித்து வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்யாமல் புறக்கணித்தனர்.

விருதுநகர் தொகுதியில் எந்த சின்னத்தில் வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களித்தாலும் அது தவறான முடிவை காட்டுவதாக வாக்காளர்கள் குற்றம்சாட்டினர். ஆனால், எங்கெல்லாம் அத்தகைய குறைபாடு இருந்ததா, அங்கெல்லாம் சரியான வாக்கை பதிவு செய்ய வசதியாக, மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.



### சர்ச்சை ஏற்படுத்திய நட்சத்திரங்களின் செயல்பாடு

திரைப்பிரபலங்கள் ரஜினிகாந்த், விஜய், அஜித், விஜய் சேதுபதி உள்ளிட்ட பலரும் இந்த தேர்தலில் வாக்குரிமையை செலுத்தினார்கள். நடிகர் விஜய் தனது வாக்குச்சாவடி இருக்கும் பகுதியில் கார் செல்ல முடியாது என்பதால் மிதிவண்டியில் வந்து வாக்குரிமை செலுத்திச் சென்றது, நடிகர் அஜித் தனது முக கவசத்தில் சிவப்பு மற்றும் கறுப்பு நிற பட்டை அணிந்திருந்த காட்சி போன்றவை அரசியல் ரீதியாக சர்ச்சைக்கு வழிவகுத்தன.

இந்த தேர்தலுக்கான முடிவுகள் வரும் மே 2ஆம் தேதி அறிவிக்கப் படவுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**35**

02B. தரப்பட்ட கவிதை தொடர்பிலான விடைகளைத் தெரிவு செய்தல் தெரிவு செய்தல்.

**2010-- 07,08,21,22**

(07) தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.


சோலை எங்கும் அதிகாலையில் - வெண்ணிறப் பூக்கள் பூத்துக் குலுங்கி
இளங்காற்றில் அசையும் காட்சியோ - அழகு
வெண்ணிறமாக மின்னி மின்னி - எழுத்தறியச் செல்லும் பாப்பாக்கள்
அசைந்தாடும் மலர்களை விட - அழகானவர்களல்லவா!

இக்கவிதை கூறுவது
1. சோலை எங்கணும் மலர்ந்திருக்கும் மலர்கள் பற்றி
2. சிறுபிள்ளைகளின் அழகு பற்றி
3. காற்றில் பூக்கள் அசையும் விதம் பற்றி

(08) இக் கவிதையில் எழுத்தறியச் செல்லும் என்பதன் கருத்து யாது?
1. கற்கச் செல்லும்
2. நூலகத்திற்கு செல்லும்
3. நிலையாகச் செல்லும்

* அடைப்புக்களில் இலக்கங்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப இடப் பட்டுள்ளன. அதற்கேற்ப

(21) எழுத்து A எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1. 9 2. 10 3. 11




(22) எழுத்து B எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1. 12 2. 11 3. 1

**2011- 05,06,07**

* தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்.
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்.
மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்.
அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்.

(05) கவிதையில் குறிப்பிடப்படுவது, காலையில் வீசும் காற்று
1. பறவைகளின் கீத ஒலியை கேட்கச் செய்யும் என்பதை
2. உடலுக்குக் குளிர்ச்சி தரும் என்பதை
3. மலர்கள் மணம் பரப்பும் என்பதை

(06) காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்
1. குளிர்ச்சியான தென்றல் காற்று வீசுதல்
2. நறுமணமுள்ள மலர்கள் மலருதல்
3. ஒளி மெதுவாகப் பரவுதல்

(07) வெற்றியினால் ..................... அடைந்த இரசிகர்கள்
1. மகிழ்ச்சி - கைதட்டினர் 2. களைப்பு - வாழ்த்தினர்
3. இன்பம் - கண்ணீர் விட்டனர்

**2012 -- 07, 08**

* பின்வரும் கவிதையைக் கொண்டு விடை தருக.

மரங் கொடியினைத் தழுவிவரும் தென்றல் காற்று சுகம் தரும்
உரமான எம் உடல் உளத்திற்கு புத்துணர்வையும் தரும் - இந்த
உண்மையை உணர்ந்து - மரங் கொடிதனை எம்முயிர் போல் காக்கும்
கடமையினைச் செய்வதே உன்னத செயலாம்.

(07) எமது உடலிற்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வைத் தருவது
1. மரங்கொடி 2. தென்றல் காற்று 3. உன்னத செயலைச் செய்தல்

(08) இக்கவிதை பிரதானமாக எமக்குக் கூறுவது
1. உடல் உளத்திற்கு புத்துணர்வு தரும் தென்றல்காற்று பற்றி
2. மரங்கொடியைத் தென்றல் காற்று தழுவி வருவது பற்றி
3. சூழலில் மரங் கொடியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி புனகாங்கி

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# குற்றவியல் புலனாய்வாளர்களுக்கு அதிக அச்சுறுத்தல், துன்புறுத்தல்!

## மனித உரிமைகள் குழு அதிர்ச்சி

கொழும்பு, ஏப்.08

**இலங்கையில் குற்றவியல் புலனாய்வாளர்கள் அதிகளவில் அச்சுறுத்தப்படும் அதேவேளை, துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் மனித உரிமைகள் குழு அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.**

இதுதொடர்பில் குறித்த குழு நேற்று வெளியிட்ட அறிக்கையில்: சர்வதேச மன்னிப்புச் சபையின் 2020 - 2021ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையில் 2020 ஆம் ஆண்டில் உலகெங்கிலுமுள்ள 149 நாடுகள் குறித்து கவலை தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சர்வதேச மன்னிப்புச் சபை உள்நாட்டு போரின்போது மேற்கொள்ளப்பட்ட மீறல்களுக்கு தொடர்ந்து தண்டனை விதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

மேலும், நீதி மற்றும் நல்லிணக்கத்தைச் சுற்றியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுதிமொழிகளை நிலைநிறுத்த அரசாங்கம் தவறிவிட்டதென்றும் சுட்டிக்காட்டியுள்ளதாக மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

தடுப்புக் காவலில் இறப்பு மற்றும் சட்டவிரோத மரண தண்டனை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகியவை பரவலாக இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கட்டாயமாக காணாமல் போன வழக்குகளில் தொடர்புடைய சட்டத்தரணிகள், சமூக ஊடகங்களில் அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல்களை எதிர்கொண்டனர் என்றும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நாவின் பல்வேறு விசாரணைகளின் கண்டுபிடிப்புக்களின்படி, சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு பொறுப்பான பல இராணுவ அதிகாரிகளும், 2020ஆம் ஆண்டில் பதவி உயர்வு பெற்று நிர்வாகத்துக்குள் சக்திவாய்ந்த பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர் என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் விளையாட்டு வீரர் வாசிம் தாஜுடீன் ஆகியோரைக் கொன்றது தொடர்பான விசாரணையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வெட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப்.08

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலி வீதியில் வீடு ஒன்றுக்கு அருகிலிருந்து வெட்டுக்காயங்களுடன் நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்கிசை பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## யாழிலிருந்து வெள்ளைவானில் சென்று

# வவுனியாவில் வீட்டுக்குள் புகுந்து வாள்வெட்டுக் குழு அட்டகாசம்!

வவுனியா, ஏப்.08

யாழ்ப்பாணத்திலிருந்து வெள்ளை வானில் வாள்களுடன் சென்ற குழு ஒன்று இரு வீடுகளுக்குள் புகுந்து உடைமைகளைச்சேதப்படுத்தியுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



வவுனியா, மூன்று முறிப்பு பகுதியிலுள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு குடியிருக்கும் இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தடியைச் சேர்ந்த பெண் ஒருவரை காதலித்துள்ளதுடன், பெண் வீட்டார் சம்மதமின்றி குறித்த பெண்ணை அழைத்து சென்று பதிவுத் திருமணமும் செய்துள்ளார்.

இந்நிலையில், யாழிலிருந்து வெள்ளை நிற வான் ஒன்றில் குறித்த பெண்ணின் தந்தை, சகோதரி ஆகியோருடன் முகத்தை கறுப்புத் துணியால் மறைத்து கட்டியபடி வாள்களுடன் சென்ற 10 இற்கும் மேற்பட்ட இளைஞர்குழு பெண்ணை அழைத்து சென்ற இளைஞன் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டு உரிமையாளரின் வீட்டுக்குள் புகுந்து ஜன்னல் கண்ணாடியை உடைத்து குறித்த பெண்ணும், இளைஞனும் எங்கே எனக்கேட்டு வாள்முனையில் அச்சுறுத்தியதாகவும், இதன்போது வீட்டு உரிமையாளரின் மகள் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியபோது இளைஞன் ஒருவர் குறித்த பெண்ணின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தியதாகவும் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த வீட்டு வளவில் அமைந்துள்ள இளைஞன் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டுக்குள்ளும் வாள்களுடன் புகுந்த குறித்த குழுவினர், குறித்த இளைஞனும் பெண்ணும் சம்பவ நேரம் அங்கு இல்லாத நிலையில், வீட்டு அறையின் கதவுகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன், அங்கிருந்த வீட்டு தளபாடங்களையும் சேதப்படுத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த இளைஞர் குழு கறுப்புத் துணிகளால் முகத்தை மறைத்து கட்டியிருந்ததாகவும், இரு வெள்ளை நிற வான்களில் வந்ததாகவும் தெரிவித்துள்ள பாதிக்கப்பட்டோர், குறித்த இளைஞர்கள் யாழிலிருந்து வருகை தந்த ஆவா குழுவா என அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை பார்வையிட்டதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

08 ஏப்ரல் 2021 வியாழக்கிழமை





# நுண்கடன்களை ரத்து செய்யக்கோரி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்!

கொழும்பு, ஏப்.08

**அனைத்து நுண்கடன்களையும் உடன் இரத்துச் செய்யக்கோரி ஹிங்கு ராக்கொடையில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

வடக்கு - கிழக்கு உட்பட இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து ஒன்றுகூடிய மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் உட்பட பல்வேறு பொது அமைப்புக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

இதன்போது, ஹிங்குராக் கொடை பிரதான வீதியூடாக கவனவீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டதால் குறித்த வீதியூடான போக்குவரத்துகள் சில மணி நேரம் பாதிக்கப்பட்டன.

நுண்கடனால் தினமும் பல பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குச் செல்வதன் காரணமாக நுண்கடன் திட்டத்தை இரத்துச் செய்யவேண்டும் என இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பெண்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கவேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டன. நுண்கடன் திட்டத்தை இரத்துச் செய்யக்கோரும் வகையிலான பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் அதுதொடர்பான கோஷங்களையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர். (எ)

# பம்பலப்பிட்டியில் சூதாட்டம் சீனர்கள் ஐவர் சிக்கினர்!

பம்பலப்பிட்டி, ஏப்.08

பம்பலப்பிட்டி, லோரிஸ் வீதிப்பகுதியில் அமைந்துள்ள சட்டவிரோத சூதாட்ட விடுதியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது ஐந்து சீனப்பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளுப்பிட்டி மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, 88 இலட்சத்து 500 ரூபா ரொக்கப் பணமும், 2600 யுவானும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிலையில், இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மக்கள் வீழ்ச்சியடையும் வகையில் அரசாங்கம் ஒருபோதும் செயல்படாது

## துமிந்த திஸாநாயக்க வாக்குறுதி

அநுராதபுரம், ஏப்.08



ஆட்சிக்கு வந்து முதல் ஆறு மாதங்களில் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாது போனாலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றும் பொதுமக்கள் வீழ்ச்சியடையும் வகையில் இந்த அரசாங்கம் ஒருபோதும் செயல்படாது எனவும் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய அவர், ஜனாதிபதியின் வழிகாட்டுதலுக்கு அமைவாக அனைவரினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் தம்மிடம் உள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படும்போது வேலையற்றோர் வேலை தொடர்பாகவும் பலர் மின்சாரம் மற்றும் தண்ணீர் போன்றவற்றை எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, பொதுமக்கள் வீழ்ச்சியடையும் வகையில் இந்த அரசாங்கம் ஒருபோதும் செயல்படாது என்றும் அவர் தெரிவித்தார். (எ)



# பாம் எண்ணெய் இறக்குமதிக்கு சிறப்பு அனுமதி

கொழும்பு, ஏப்.08

பிஸ்கட் மற்றும் பேக்கரி உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தி செயல்முறைக்கு பாம் எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு சிறப்பு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், பேக்கரி உரிமையாளர்கள் உள்ளிட்டோர் கடுமையாகப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக வலியுறுத்தி வந்த நிலையில் இந்த சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

# பிக்குவிடம் 25 இலட்சம் ரூபாய் லஞ்சம் கோரிய இருவர் கைது!

கொழும்பு, ஏப்.08

மொறட்டுவ பகுதியில் அமைந்துள்ள விகாரையொன்றின் பிக்குவிடமிருந்து 25 இலட்சம் ரூபாய் இலஞ்சமாகப் பெற முயன்ற குற்றச்சாட்டில் கொழும்பு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேகநபர்கள் கோரிய பணத் தொகையிலிருந்து ஆரம்பகட்டமாக 5 இலட்சம் ரூபா பெற முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கைதான சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# மரத்தூளைப் பயன்படுத்தி பலகை தயாரிக்க திட்டம்

கொழும்பு, ஏப்.08

மரத்தூளைப் பயன்படுத்தி மரப்பலகைகள் தயாரிக்கும் முறை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மரப்பலகை இறக்குமதி செய்வதற்காக 41 ஆயிரத்து 576 மில்லியன் ரூபாய் செலவாகியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், 59 நாடுகளிலிருந்து இலங்கைக்கு மரப்பலகைகளை இறக்குமதி செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# இளைஞனின் உயிரைப் பறித்த கொங்கிறீட் கலவை இயந்திரம்

## மின்சாரம் தாக்கியதால் விபரீதம்

இரத்தினபுரி, ஏப்.08

எஹலியகொடை, பதுவத்தை பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி 19 வயது இளைஞன் உயிரிழந்த நிலையில் மேலும் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டிட நிர்மாணப்பணியில் ஈடுபட்டிருந்த இருவரே இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கட்டிட நிர்மானத்துக்காக கொண்டுவரப்பட்ட கொங்கிறீட் கலவை இயந்திரத்தில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி பிரதேசத்தை சேர்ந்த உயிரிழந்த இளைஞனின் சடலம் எஹலியகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் எஹலியகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசாங்கம் தெளிவான தீர்மானம்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.08

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் தெளிவான தீர்மானத்தை எடுத்துள்ளது. இதற்கமைய புதிய சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மேலும் காலம் தாழ்த்தாமல் வெகுவிரைவாக தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

மாகாண சபைத் தேர்தல் குறித்து தெளிவானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எமது தேர்தல் பிரசாரத்துக்கு அமைய விருப்பு வாக்கு முறைமையை நீக்கவும், 70 வீதம் தொகுதிவாரி முறைமையின் அடிப்படையிலும் 30 வீதம் விகிதாசார முறைமையின் அடிப்படையிலும் உறுப்பினர்களைத் தேர்ந் தெடுப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டவுடன் தேர்தல் நடத்தப்படும்.

இதற்கமைய கடந்த 15 வருடங்களாக அவதானம் செலுத்தப்பட்ட விடயத்துக்கு ஏற்ப தொகுதிகளை எவ்வாறு நிர்ணயிப்பது என்பது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டு வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும். அமைச்சரவையிலும் இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. தேர்தல் மேலும், காலம் தாழ்த்தாமல் வெகுவிரைவில் நடத்தும் நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்ராஸெனகா இரத்தக்கட்டி பாதிப்பை ஏற்படுத்துகிறது!

## உறுதி செய்தது ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம்

ரோம், ஏப். 08

ஐரோப்பிய ஒன்றியத்தின் மருந்துகள் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் அஸ்ராஸெனகா வைரஸ் தடுப்பூசிக்கும் உயிரிழப்புகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்தி உள்ளார்.

தடுப்பூசி தொடர்பில் அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை தீர்மானிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றிய மருந்துகள் நிறுவனத்தின் அதிகாரிகள் இரண்டொரு தினங்களில் கூடி விவாதிக்கவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய மருந்துகள் நிறுவனத்தின் தடுப்பூசிகளுக்குப் பொறுப்பான அதிகாரி மார்கோ கவலேறி, அஸ்ராஸெனகா தடுப்பூசிக்கும் இரத்தக் கட்டிகளால் ஏற்படுகின்ற மரணங்களுக்கும் இடையே "தெளிவான" தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்தினார். ஆனால், தடுப்பூசி எவ்வாறு இரத்தக் கட்டிப்பாதிப்பை உண்டாக்குகின்றது என்பது எமக்கு இன்னமும் புரியவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"தடுப்பூசிக்கும் இந்த நோய்க்கும் இடையே என்ன நடக்கிறது என்பது தொடர்பில் தெளிவைப் பெறுவதற்கு முயற்சித்து வருகின்றோம். தடுப்பூசி ஏற்றியோரிடையே மூளைக் கட்டிகள் ஏற்பட்டுள்ளன. எதிர்பார்த்ததை விடவும் இளையோர்களிடையே அது அதிகமாக உள்ளது" - இவ்வாறு இத்தாலியப் பத்திரிகை ஒன்றுக்கு மார்கோ தெரிவித்துள்ளார்.



இதேவேளை, பிரான்ஸில் நாடெங்கும் தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலானவர்கள் ஊசி ஏற்றப் பின்னடித்து வருகின்றனர் என்று செய்திகள் வெளியாகி உள்ளன. சில தடுப்பூசி மையங்கள் ஊசி ஏற்ற யாரும் இன்றி வெறிச்சோடிக் கிடக்கும் காட்சிகளைத் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பி உள்ளன.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் மற்றும் சுவீடன் கூட்டுத் தயாரிப்பான அஸ்ராஸெனகா தடுப்பூசி மீதான அவநம்பிக் கையே மக்கள் ஊசி ஏற்றப் பின்னடிப்பதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (ஐ)



# 100நாளில் 20 கோடி தடுப்பூசி: அமெரிக்கா புதிய இலக்கு!

வாஷிங்டன், ஏப். 08

அமெரிக்காவில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி போடும் பணி எதிர்வரும் 19ஆம் திகதி முதல் தொடங்கும் என்று ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தான் பதவியேற்ற முதல் 100 நாட்களுக்குள் 10 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்படும் என பைடன் வாக்குறுதி அளித்தார். எனினும் 58 நாட்களுக்குள்ளேயே இந்த இலக்கை அவர் அடைந்துள்ளார். தற்போது நிர்ணயிக்கப்பட்ட 100 நாட்களுக்குள் 20 கோடி பேருக்கு தடுப்பூசி போடும் இலக்கை நோக்கி அமெரிக்க நகர்ந்து வருவதாக பைடன் தெரிவித்துள்ளார்.

மே முதலாம் திகதி முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து அமெரிக்கர்களுக்கும் தடுப்பூசி போடும் நடவடிக்கை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் திட்டமிட்ட இந்தக் கால எல்லைக்கு 2 வாரங்கள் முன்னதாகவே இந்தத் திட்டம் ஆரம்பமாகுமென பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொரோனாவின் ஆபத்தான புதிய திரிபுகள் வேகமாகப் பரவி வருகின்றன. கோடிக்கணக்கானவர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளபோதும் அங்கு தொடர்ந்து 50 ஆயிரம் பேர் வரை தினசரி தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கோவிட்19 தடுப்பூசி போட பல மாதங்கள் ஆகும். அதுவரை அமெரிக்கர்கள் தொடர்ந்தும் முக கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றல் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டல்களை தீவிரமாகப் பின்பற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார். (ஐ)



# நெதன்யாகு ஆட்சி அமைக்க 28 நாள் காலக்கெடு விதிப்பு!

ஜெருசலேம், ஏப். 08


இஸ்ரேலில் அண்மையில் நடந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை (61 ஆசனங்கள்) கிட்டவில்லை. இந்நிலையில், தேர்தலில் முதலிடம் பிடித்த (59 ஆசனங்கள்) பிரதமர் நெதன்யாகுவை அரசாங்கத்தை அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் கடந்த இரு ஆண்டுகளில் நடந்த நான்காவது தேர்தல் இதுவாகும். யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமையால் நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலை உள்ளது.

இந்நிலையில், நெதன்யாகுவை ஆட்சி அமைக்குமாறு ஜனாதிபதி ருவன் ரிவ்லின் அழைப்பு விடுத்துள்ளார். இதற்காக அவருக்கு 28 நாட்கள் காலக்கெடுவும் கொடுத்துள்ளார். அப்படி அவர் ஆட்சி அமைக்க தவறின், அடுத்து பெரும்பான்மை கோரும் கட்சிக்கு ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் வழங்கப்படும். எவரும் ஆட்சி அமைக்க உரிமை கோராத பட்சத்தில் மீண்டும் தேர்தல் நடத்தப்படும். (ஐ)

# அஸ்ராஸெனகா தடுப்பூசியை சிறாரிடம் சோதிப்பது நிறுத்தம்!

லண்டன், ஏப். 08



இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அஸ்ராஸெனகா தடுப்பு மருந்தை சிறுவர்களிடையே பரிசோதிப்பதை இடைநிறுத்தி உள்ளது. வளர்ந்தவர்களில் தடுப்பூசி ஏற்படுத்துகின்ற இரத்தக் கட்டிகள் தொடர்பான அறிக்கைகளை அடுத்தே சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பரீட்சார்த்த சோதனைகள் இடைநிறுத்தப்படுகிறது என்று ஒக்ஸ்போர்ட் அறிவித்துள்ளது.

"பரிசோதனைகளில் பாதுகாப்பு தொடர்பான எந்தக் கவலைகளும் இல்லை. ஆனால், அது தொடர்பில் அறிவியலாளர்கள் மேலும் தகவல்களை எதிர்பார்த் துள்ளனர்" - என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அன்ட்ரூ பொலார்ட் பி.பி.சி. செய்திச் சேவையிடம் தெரிவித்தார்.

ஆறு வயது முதல் 17 வயது வரையானோரிடையே தடுப்பூசி வலுவான நோயெதிர்ப்புச் சக்தியை உருவாக்குகின்றதா என்பதை அறிவதற்காக இந்தப் பரீட்சார்த்த சோதனைகள் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக 300 சிறுவர்கள் பரிசோதனைக்குத் தெரிவாகி இருந்தனர்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் அஸ்ராஸெனகா தடுப்பூசி ஏற்றிய பின்னர் சிலர் இரத்தம் உறைதல், மூளையில் இரத்தக் கட்டி போன்ற பக்க அறிகுறிகளால் பாதிக்கப்பட்டனர். மரணங்களும் பதிவாகி உள்ளன. பிரான்ஸில் ஏற்பட்ட இரண்டு உயிரிழப்புகளுக்கு பொறுப்புக் கூறுமாறு கேட்டு உறவினர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஐ)



# நியூயோர்க் அடுக்குமாடியில் பெரும் தீ விபத்து: 21 பேர் காயம்!

நியூயோர்க், ஏப். 08

நியூயோர்க்கின் குயின்ஸில் அமைந்துள்ள அடுக்குமாடிக் கட்டடம் ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் தீயணைப்பு வீரர்கள் உள்ளிட்ட 21 பேர் காயமடைந்தனர்.

தீப் பரவலை கட்டுப்படுத்தும் முயற்சியில் 350இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்களும், 8 தீயணைப்பு வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டன என்று அமெரிக்க ஊடங்கள் தெரிவித்தன.

தீ விபத்தில் காயமடைந்தவர்களில் 16 தீயணைப்பு வீரர்களும், ஐந்து பொதுமக்களும் உள்ளடங்குவர். எனினும், இதில் யாரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் இல்லை என்றும் நியூயோர்க் தீயணைப்புத் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த கட்டிடத்தில் சுமார் 150 குடியிருப்புகள் உள்ளதுடன், விபத்தினையடுத்து 90 குடும்பங்களை சேர்ந்த 240 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்டடத்தின் ஆறாவது மாடியில் உள்ள ஒரு குடியிருப்பில் தீ விபத்து ஆரம்பத்தில் ஏற்பட்டுள்ளதுடன், அது ஏனைய குடியிருப்புகளுக்கும் விரைவாக பரவியுள்ளது. எனினும் தீ விபத்துக்கான காரணம் கூறப்படவில்லை. (ஐ)

# கொரோனா பலியெடுப்பு உச்சம்: பிரேஸிலில் 4,195 பேர் உயிரிழப்பு!

பிரேஸிலில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 4,195 பேர் நேற்று முன்தினம் மட்டும் உயிரிழந்தனர். பிரேஸில் முழுவதும் கொரோனா வைரஸின் ஆபத்தான பிறழ்வுகள் வேகமாக பரவி வருகின்றன. தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பால் போதிய மருத்துவ சிகிச்சையின்றி நாளாந்தம் ஆயிரக்கணக்கான வர்கள் இறக்கின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மட்டும் 4,195 பேர் உயிரிழந்தனர். பிரேஸிலில் மரண எண்ணிக்கை நான்காயிரத்தை கடந்திருப்பது இதுவே முதல் தடவை. இதனால், அந்நாட்டில் தொற்றுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 37 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

நாட்டில் தொற்றும் - அதனால் ஏற்படும் மரணமும் அதிகரித்துள்ள போதிலும் நாட்டை முடக்கப் போவதில்லை என்பதில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ உறுதியாக இருக்கிறார். நாட்டை முடக்குவதால் ஏற்படும் பொருளாதார இழப்பு தொற்று நோய் நெருக்கடியையும் விட அதிகமாக இருக்கும் என்பது அவரின் வாதமாக உள்ளது.

இதேவேளை, ஒரு கோடியே 30 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அந்நாட்டில் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனைகளுக்காக காத்திருக்கும் டோனி!

சென்னை, ஏப். 08

ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் டோனி பல சாதனைகள் படைக்கக் காத்திருக்கிறார்.

இந்திய அணி முன்னாள் அணித் தலைவர் டோனி ஐ.பி.எல்., தொடர் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து சென்னை அணியின் தலைவராகக் களமிறங்கி வருகிறார். இதுவரை 2010, 2011, 2018 என மூன்று முறை சம்பியனை வென்றார். தவிர, சென்னை அணிக்காக பங்கேற்ற 11 தொடர்களில், 10இல் அடுத்த சுற்றுக்கு கொண்டு சென்றார். கடந்த முறை மட்டும் 7வது இடம் பெற்றது சென்னை.

தற்போது ஐந்து மாத இடைவெளிக்குப் பின் மீண்டும் 14ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடரில் களமிறங்குகிறார் டோனி. கடந்த 2020இல் 14 போட்டிகளில் டோனி 200 ஓட்டங்கள் மட்டும் எடுத்த இவர், வரும் தொடரில் ஓட்ட வேகம் காட்டலாம். தற்போது 331 போட்டிகளில் 6,821 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இம்முறை 179 ஓட்டகள் எடுக்கும் பட்சத்தில் இருபது - 20 கிரிக்கெட்டில் ஒட்டுமொத்தமாக 7000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டலாம்.

ஒருநாள், ருவென்ரி - 20 போட்டிகளில் சிக்ஸர் அடிப்பதில் வல்லவர் டோனி. வரும் தொடரில் கூடுதலாக 14 சிக்ஸர் அடிக்கும் பட்சத்தில், சென்னை அணிக்காக 200 சிக்ஸர் அடித்த முதல் வீரர் என்ற பெருமை பெறுவார். விக்கெட் காப்பைப் பொறுத்தவரையில் டோனி மின்னல் வேகத்தில் செயல்படுவார். இந்திய, சென்னை அணிகளுக்காக பலமுறை இதை நிரூபித்தார். 14ஆவது தொடரில் கூடுதலாக 2 வீரர்களை ஆட்டமிழப்பு செய்யும் பட்சத்தில், ஐ.பி.எல்., தொடரில் 150 விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த முதல் விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை டோனி படைப்பார்.(ஐ)



# நியூஸிலாந்துக்கு எதிரான தொடரை வென்றது ஆஸி!

மௌண்ட் மௌகனாய், ஏப். 08

இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் வென்று நியூஸிலாந்து மகளிர் அணிக்கு எதிரான தொடரை வெற்றி கொண்டது அவுஸ்திரேலிய மகளிர் அணி.

நியூஸிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய பெண்கள் அணி 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியில் வென்றதன் மூலம் தொடர்ச்சியாக 23 போட்டிகளில் வென்று கிரிக்கெட் உலகில் சாதனை படைத்தது அவுஸ்திரேலிய பெண்கள் அணி.

இதைத் தொடர்ந்து நேற்று நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று நடந்தது. இதில் முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 271 ஓட்டங்களைப் பெற்றது. இதில், ராச்சல் ஹய்னெஸ் 87, மெக் லன்னிங்க் 49, அலிஸா ஹேலிஸ் 44 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் லெய்ஹ் காஸ்பெர்க் 6 விக்கெட்களை கைப்பற்றினார்.

272 ஓட்டங்கள் என்ற இலக்கைத் துரத்திய நியூஸிலாந்து மகளிர், 45 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில், அமெலியா கெர் 47, புரூக் ஹாலிடே 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

அவுஸ்திரேலிய மகளிரின் பந்து வீச்சில் ஜெஸ் ஜொனசன் 3, ஜோர்ஜியா 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)

# ஒருநாள் தரவரிசையில் ஷாமன் முன்னேற்றம்!

டுபாய், ஏப். 08

பாகிஸ்தான் வீரர் பஹார் ஷாமன் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 193 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன்மூலம், ஒருநாள் தரவரிசையில் அவர் 7 இடங்கள் முன்னேறி 12ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இது அவர் தனது கிரிக்கெட் வாழ்வில் அடைந்துள்ள சிறந்த இடமாகும்.

பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா அணிகள் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் மோதிய போட்டியில் 155 பந்துகளில் 193 ஓட்டங்களைப் பெற்றதன் மூலமே அவர் இந்த சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளார். (ஐ)






# உலகக்கிண்ண போட்டிகள் இந்தியாவிலிருந்து மாற்றம்?

டுபாய், ஏப். 08

இந்தியாவில் தற்போது கொரோனா பரவல் அதி தீவிரமாக பரவி வருகின்றது. எனினும், கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் ஐ.பி.எல். தொடர் நாளை ஆரம்பமாகின்றது.

இந்நிலையில், இந்த ஆண்டு இருபது - 20 தொடர் இந்தியாவிலிருந்து மாற்றப்படலாம் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையான ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறுகையில், "இருபது - 20 உலகக் கிண்ணத்தை திட்டமிட்டபடியே நடத்துவதில் உறுதியாக உள்ளோம். ஆனாலும், எங்களிடம் மாற்று திட்டம் உள்ளது. அது குறித்து இன்னும் யோசிக்கவில்லை. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையுடன் இது குறித்து நாம் ஆலோசித்து வருகின்றோம்", என்றார்.

# தேவ்தத் படிக்கல் அணி மீண்டார்!

பெங்களூர், ஏப். 08

பெங்களூரார் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர் தேவ்தத் படிக்கல் கொரோனா தொற்றிலிருந்து மீண்ட நிலையில் அணியின் உயிர் காப்பு சூழலுக்குள் முறைப்படி இணைந்தார் என்று அந்த அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அந்த அணியின் மற்றொரு வீரரான அவுஸ்திரேலியாவின் டானியல் சாம்ஸீம் தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தலில் உள்ளார்.

ஐ.பி.எல். தொடர் நாளை சென்னையில் ஆரம்பமாகும் நிலையில் பெங்களூரார் அணிக்கு தேவ்தத் படிக்கல் திரும்பியிருப்பது, அந்த அணிக்கு உற்சாகத்தை அளித்துள்ளது.

கடந்த தொடரில் தேவ்தத் 15 போட்டிகளில் விளையாடி 473 ஓட்டங்களை குவித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தார். இந்தத் தொடர் அவரின் அறிமுக தொடராக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பீஜிங் ஒலிம்பிக்கை புறக்கணிக்க அமெரிக்காவுடன் பேசவில்லை

## மறுக்கிறது ஜப்பான்

BEIJING 2022
Candidate City

ரோக்கியோ, ஏப். 08

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கை புறக்கணிப்பது தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்தவில்லை என்று ஜப்பான் அரசாங்கத்தின் உயர் செய்தித் தொடர்பாளர் கட்சுனோபு கட்டோ நேற்றுத் தெரிவித்தார்.

சீனாவின் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளை புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

இந் நிலையில் 2022 பீஜிங் ஒலிம்பிக்கை புறக்கணிப்பதை ஜோ பைடன் நிர்வாகம் பரிசீலித்து வருவதாக அமெரிக்க வெளியுறவுத் துறை செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

குறிப்பாக பீஜங் ஒலிம்பிக்கில் பங்கேற்பதை எவ்வாறு ஒருங்கிணைந்த வழியில் தொடரலாம் என்பது குறித்து தனது கூட்டாளர்களுடன் கலந்துரையாடி வருவதாக அமெரிக்கா கூறியிருந்தது.

இவ்வாறான பின்னணியிலேயே ஜப்பான் அரசாங்கத்தின் உயர் செய்தித் தொடர்பாளர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொரோனா கொத்தணி உருவாகலாம்

## வைத்திய நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை




**கொழும்பு,ஏப்.08**

**நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டுமொரு கொத்தணி உருவாகக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. எனவே, போக்குவரத்தின் போதும், பொருள்கள் கொள்வனவின் போதும், சுற்றுலா செல்லும் போதும் மக்கள் அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை நிச்சயம் பின்பற்ற வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் - சிங்கள புத்தாண்டு அண்மித்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

எனினும், நாளாந்தம் சுமார் 100 தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் வைரஸ் பரவல் தீவிரமடையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

எனவே, பொதுப் போக்குவரத்தின் போதும், பொருள்கள் கொள்வனவின் போதும், சுற்றுலா செல்லும் போதும் மக்கள் அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை நிச்சயம் பின்பற்ற வேண்டும். சமூக இடைவெளியைப் பேண முடியாததும், மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் இடங்கள் என்பவற்றில் பொது மக்கள் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்- என்றார்.

இதன்போது, மேல் மாகாணத்தில் தனியார் வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் விஷேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவிக்கையில்:

மேல் மாகாணத்தில் 12 ஆம் திகதி முதல் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் வழமையான மாணவர் தொகையில் 50 வீதமானோர் மாத்திரமே வகுப்புக்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

அத்தோடு வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் அனுமதி பெற்றப்பட வேண்டும். மேலும் புத்தாண்டின் பின்னர் பல்கலைக்கழகங்களையும் ஆரம்பிப்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (எ)

# பாம் மரங்களை வளர்க்க இனி இடமளிக்கப்படாது!

## சபையில் பந்துல பதில்

*கொழும்பு, ஏப்.08*

தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்படும் பாம் எண்ணெய்க்குத் தடை இல்லை எனவும், புதிதாக பாம் மரங்களை வளர்ப்பதற்கு இடமளிக்கப்படாது எனவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை வாய்மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மா குறித்து ஆளும் கட்சி உறுப்பினர் மொஹம்மட் முஸம்மில் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல:

கடந்த 2015 - 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கைக்கு 461 மில்லியன் கிலோ கிராம் பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது, இதற்காக 2 இலட்சத்து 13 ஆயிரத்து 8 மில்லியன் (2,13,008) மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 - 2014 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தொகையை விடவும் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் பால்மா, சீனி போன்றவற்றில் உடலுக்கு ஒவ்வாத அல்லது விஷ திரவங்கள் இருப்பதாக நீண்டகால விவாத மொன்று உள்ளது. உணவு தர நிர்ணயம் குறித்து இப்போது பல்வேறு சர்ச்சைகளும் எழுந்துள்ளன.

எவ்வாறு இருப்பினும் உணவு தர நிர்ணய நிறுவனத்துக்கு மேலதிகமாக வர்த்தக அமைச்சின் சில நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் ஆய்வுகளுக்கு இவை உட்படுத்தப்படுவதுடன் உலகமே ஏற்றுக் கொள்ளும் தரமான ஆய்வு கூடமும் பேராதனை பல்கலைக்கழகத்தில் உள்ளது.

ஆகவே, இப்போது அரசாங்கம் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தை உருவாக்கி வருகின்றது. அரசாங்கம் பாம் எண்ணெய் இறக்குமதியையும் தடை செய்துள்ளது- என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் குமார வெல்கம, தேசிய ரீதியில் பாம் எண்ணெய் உற்பத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன, இதனைப் பயன்படுத்த அரசாங்கம் அனுமதி வழங்குகின்றதா? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பந்துல: தேசிய ரீதியிலான உற்பத்தியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே நாட்டுக்குள் உற்பத்தி செய்யப்படும் பாம் எண்ணெயின் தரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதனை அரசாங்கம் தடை செய்யாது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் எண்ணெய்யையே தடை செய்துள்ளோம். அதுவும் ஒரேயடியாக தடை செய்ய முடியாது. பிஸ்கட் போன்றவற்றிற்கு இவை பயன்படுத்தப்படுகின்றது. எனவே அதற்குத் தேவையான சுத்தமான பாம் எண்ணெய் இறக்குமதி செய்யப்படும்- என்றார்.

மீண்டும் கேள்வி எழுப்பிய வெல்கம எம்.பி. தேசிய உற்பத்தியாளர்கள் புதிதாக பாம் மரங்களை வளர்க்க இடமளிக்க முடியுமா?

அமைச்சர் பந்துல: இல்லை, புதிதாக பாம் மரங்களை வளர்க்க இடமளிக்க மாட்டோம்- என்றார். (எ)

# ஆசனங்களுக்கு மேலதிகமாக பயணிகள் 150 பஸ்களின் அனுமதிப்பத்திரம் இரத்து!

*கொழும்பு,ஏப்.08*

ஆசனங்களுக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் 150 பஸ்களின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, புது வருடத்துக்கு தமது சொந்தவூர் சென்று திரும்பும் மக்களின் வசதிக்காக விஷேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையின் 1992 பஸ்களும், 21 ரயில்களும் மற்றும் 1,800 தனியார் பஸ்களும் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

நாளை 9 ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதி வரை இந்த விஷேட சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நல்லாட்சி காலப்பகுதியில் பாரியளவு நிதி முறைகேடு

## மதுர விதானகே முறைப்பாடு



கொழும்பு, ஏப்.08

கடந்த நல்லாட்சி அரசாங்க காலப் பகுதியில் வைத்திய சாலைகளுக்கு மருந்துகளை அரசாங்கம் வழங்குவதில் பாரியளவு நிதி முறைகேடு இடம்பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

முறைப்பாடு செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மதுர விதானகே:

2015 ஜனவரி முதல் 2019 இறுதி வரை, வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வாங்குவதில் இலங்கை பொதுச் சுகாதாரத் துறை பாரிய முறைகேடுகளை செய்திருப்பதை சமீபத்தில் கண்டுபிடித்தோம். பல நிறுவனங்கள் கண்காணிக்கப்பட்டன. இதன்படி, 2015 - 2019 கால கட்டத்தில், அரசு வைத்தியசாலைகளுக்கு மருந்துவ உபகரணங்கள் மற்றும் தடுப்பூசிகளை வாங்குவதில் கடுமையான முறைகேடு நடந்ததை நாங்கள் கண்டறிந்தோம். பொதுச் சந்தையில் சுமார் 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் மருந்து, அரச மருந்தக கூட்டுத்தாபனம் ஊடாக 15 ஆயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய்வரை அதிக விலைக்கு வாங்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

# இன ஒற்றுமையை சீர்குலைக்க ஒருபோதும் இடமளிக்கக்கூடாது

## கரு ஜெயசூரிய வலியுறுத்து



கொழும்பு, ஏப்.08

நாட்டில் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதே உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தியவர்களின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியானதிலிருந்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், நாமனைவரும் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவரது ருவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அப்பதிவில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது சமூகத்தின் ஒற்றுமையை சீர்குலைப்பதே உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தாக்குதல்களை நடத்திய தற்கொலைக் குண்டுதாரிகளின் நோக்கமாகக் காணப்பட்டது.

எனினும் அந்த நோக்கத்துக்குப் பலியாகாமல் நாம் வெற்றி பெற்றோம். அதற்காகத் தூர நோக்கு சிந்தனையுடன் செயல்பட்ட மத மற்றும் சமூகத்தலைவர்களுக்கு நன்றி கூறவேண்டும்.

இந்நிலையில் தற்போது உயிர்த்த ஞாயிறு தினத்தாக் குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, இது குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், இப்போதும் நாமனைவரும் ஒற்றுமையாகச் செயல்படுவது அவசியமாகும் என்று அப்பதிவில் வலியுறுத்தியுள்ளார். (எ)

# 15 அடி பள்ளத்துக்குள் பாய்ந்து ஓட்டோ விபத்து

கந்தப்பளை, ஏப்.08

ஐபொரஸ்ட் பகுதியிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று 15 அடி பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

கந்தப்பளை - நுவரெலியா இராகலை பிரதான வீதியின் கொங்கோடியா தோட்டப் பகுதியில் நேற்று அதிகாலை 04 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரையே விபத்துக்கான காரணம் எனத் தெரிவித்த கந்தப்பளை பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளை கத்தோலிக்கர்கள் நம்ப வேண்டும்!

## அமைச்சர் சரத் வீரசேகர கோரிக்கை



கொழும்பு, ஏப்.08

**ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடக்கும் விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். நாம் அவர்களின் உணர்வுகளை மதிக்கிறோம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் செயல்படுத்தாவிடின் வீதியில் இறங்கி போராடப் போவதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியமை தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், "போராட்டங்களில் ஈடுபடும் உரிமை அனைத்து தரப்பினருக்கும் உண்டு. ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்கள் சார்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிடும் கருத்துக்களை உணர்வுபூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் திணைக்களம் முன்னெடுத்த விசாரணை அறிக்கை, ஜனாதிபதி விசாரணை அறிக்கை, பாராளுமன்ற தெரிவு குழுவின் விசாரணை அறிக்கை ஆகிய அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கைகள் எடுப்பது குறித்து சட்டமா அதிபர் உரிய நவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. ஆகவே விசாரணை அறிக்கைகள் மீதும், முன்னெடுப்பட்டுள்ள விசாரணைகள் மீதும் கத்தோலிக்க மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றார்.

மேலும், பொது மக்கள் அச்சமின்றி வாழும் சூழலை ஏற்படுத்துவது ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷவின் எதிர்பார்ப்பாகும். இதற்காகவே, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது.

கடந்த காலத்தை காட்டிலும் தற்போது தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவையை ஒழுக்கமான முறையில் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றும் கூறினார். (ஐ)

# இன்று பாராளுமன்றம் வருகிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப். 08

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இன்று வியாழக்கிழமை பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்றைய தினம் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காகவே இன்றைய தினம் அவர் பாராளுமன்றுக்கு வருகிறார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொள்கின்றமை இதுவே முதல் முறையாகும். (ஐ)

# இரு சிறுவர்கள் துஷ்பிரயோகம் தம்பலகாமம் விகாரதிபதி கைது!

திருகோணமலை, ஏப். 08

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் பௌத்த பிக்கு ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை, தம்பலகாமம் 96ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய விகாராதிபதி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

12 மற்றும் 14 வயது சிறுவர்கள், பூசை வழிபாட்டுக்காகச் சென்ற போது, பௌத்த பிக்கு தங்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று பாதிக்கப்பட்ட சிறுவர்கள், தமது பெற்றோர்களுடன் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து, நேற்று முன்தினம் இரவு பிக்குவைக் கைதுசெய்த பொலிஸார், அவரை கந்தளாய் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

# குற்றவாளிகளை தண்டியுங்கள் அப்பாவிகளை விடுவியுங்கள்!

## ரிஷாத் எம். பி. கோரிக்கை



கொழும்பு, ஏப்.08

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவருக்கும் தகுந்த தண்டனைகள் வழங்குங்கள். அதேசமயம் சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான அப்பாவிகளை உடனடியாக விடுதலை செய்யுங்கள் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

"ஓர் இனத்தை குறியாக வைத்து, அதை மையப்படுத்தி, உங்களின் கவனத்தை செலுத்தி, அந்த இனத்தை மட்டும் அடக்க நினைக்காதீர்கள். நாட்டின் மீது பாசம் கொள்ளுங்கள். இந்த நாடு சுதந்திரமடைந்து 70 வருடங்களுக்கு மேலாகின்றது. அதில் 30 வருடங்கள் தமிழ் மக்களுடனான போராட்டமும், அதன் பிறகு அண்மைய பத்து வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்களுடனான போராட்டமும் தொடர்கிறது.

கண்டி - திகன, தம்புள்ள, காலி, அளுத்கமை ஆகிய இடங்களில் முஸ்லிம்கள் மீது குண்டர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்கள் தாங்க முடியாதவை. ஞானசார தேரரின், 'அப சரண' என்ற வசனம், அதாவது அழிவை நோக்கிய, கொலை செய்ய தூண்டக் கூடிய அந்த வசனத்தினால்தான், அளுத்கமையில் நான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் முஸ்லிம்களின் பல்லாயிரக்கணக்கான சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

முஸ்லிம் சமூகம் எந்தச் சந்தர்ப்பத்திலும் சஹ்ரானின் கொடூரச் செயலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை "ஏன் மேற்கொண்டோம்?" என சஹ்ரான் வீடியோவின் மூலம் கூறி, "ஞானசார தேரரின் பேச்சினால்தான் இவ்வாறு நடைபெறுகின்றது" எனத் தெரிவித்துள்ளார். எனவே, இவைகளை இனியாவது கவனத்தில் கொண்டு இந்த நாட்டை மீண்டும் அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும் - என்றார். (ஐ)

# 4 பிரதான மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய பிரான்ஸ் ஆர்வம்!

## அமைச்சர் டக்ளஸிடம் கூறினார் தூதுவர்

கொழும்பு, ஏப். 08

நாட்டின் நான்கு பிரதான மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரான்ஸ் ஆர்வமாக இருப்பதாக தம்மை சந்தித்த கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவுக்கு இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவரூ தெரிவித்துள்ளார்.



பிரான்ஸ் தூதுவர் தலைமையிலான அதிகாரிகள் நேற்று கடற்றொழில் அமைச்சரை சந்தித்து பேசினர். இதன்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

தென் பகுதியிலுள்ள காலி, பேருவளை, குடாவெல்ல மற்றும் குரானவெல்ல ஆகிய மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு தமது அரசாங்கம் விரும்புவதாகவும், அதற்கான ஆய்வு நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாகவும் விரைவில் அதற்கான பணிகளை ஆரம்பிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடி துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஆர்வமாக இருப்பதாகவும், நாட்டிலுள்ள அனைத்து நீர் நிலைகளும் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் போதிய அறுவடைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பிரான்ஸ் தூதுவர் கூறினார்.

மேலும், இலங்கையில் கண்ணாடி நாரிழையில் தயாரிக்கப்பட்ட படகுகளால் சுற்றாடல் மாசடைவதாகவும் அவற்றை உரிய முறையில் அப்புறப்படுத்துவதற்கு தகுந்த கட்டமைப்பொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்ததுடன் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் துறையில் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கவும் தமது நாடு ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையில் கடற்றொழில் துறையைப் பொறுத்தளவில் வளமான எதிர்காலம் இருப்பதகவும் அத்துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்றார். அத்துடன், இத்துறையின் வளர்ச்சிக்கு குறிப்பாக வட- கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில் துறையின் அபிவிருத்திக்கு உதவுமாறு தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் படகு கண்காணிப்பு கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இலங்கை மீனவர்களிடம் இல்லாத காரணத்தினால் அவர்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர் கொண்டு வருவதாகவும் ஆகவே அதற்கான உதவிகளை பெற்றுத் தருமாறும் அமைச்சர் இதன்போது கேட்டார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
பகல்
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - பாரிஸ் ஜெயராஜ்




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு - இசை நிகழ்ச்சி



10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : ஊ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்
**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் மஹா காளி முத்துமாரி அம்மன் கோவில் திருவிழா
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
9.00 மணி : யாழ்ப்பாணம் மஹா காளி முத்துமாரி அம்மன் கோவில் திருவிழா

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை
**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்
**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org